
விலை சதம் 20

# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, தை 27 உ சனி (9-2 69) துல்கஃதா 21 புத்தகம் 23 இதழ் 16




## சுதந்திரனுக்கு நெடுஞ்செழியன் கருணாநிதி பிரத்யேகச் செய்தி!

## திராவிட முன்னேற்றக் கழகம்

# பிளவுபட இடந்தரோம்!

"அறிஞர் அண்ணாவை இழந்த அதிர்ச்சியிலிருந்து சிறிது கூட விடுபடாத நிலையில் நாங்கள் இன்னும் இருக்கிறோம். இந்த நிலையில் அண்ணாவுக்குப்பின் அவரா இவரா என்ற பிரச்சினையை கிளறிவிடுவதன் மூலம கழகத்துள் கலாம் ஏற்படுத்திவிடலாமென்று சிலர் நினைக்கிறார்கள் இது ஒருபோதுமே நடவாத காரியம் என்பதை அப்படிப்பட்டவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

"எந்த நிலையிலும், எத்தச் சந்தர்ப்பத்திலும், தி. மு. கழகத்தில் துளிகூட பிளவு ஏற்பட அனுமதிக்க மாட்டோம். இது அண்ணாவின் ஆணை. உண்மையில அண்ணாவுக்குப் பின் யார் என்ற கேள்வி பிரச்சினைக்குரிய ஒரு கேள்வியாகவோ அதில் சிக்கல் நிறைந்திருப்பதாகவோ எமக்கு தோன்றவில்லை. ஜனநாயக ரீதியில் இயங்கிவரும் தி. மு. கழகம் ஜனநாயகரீதியில் இப்பிரச்சினையையும் அமைதியாகத் தீர்த்துக்கொள்ளும்."

—இவ்வாறு தற்காலிக முதல்வர் நாவலர் நெடுஞ்செழியனும், பொதுப்பணி அமைச்சர் கலைஞர் கருணாநிதியும் சுதந்திரன் சென்னை நிருபருக்கு தனித்தனியாக அளித்த பேட்டியொன்றில் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.]

திராவிட முன்னேற்றக் கழகத்தின் புதிய பொதுச் செயலாளர் தெரிவு இன்னும் நடைபெறவில்லை. பொதுச்செயலாளர் பதவிக்கு பெரும்பாலும் திரு. மு. கருணாநிதியே தெரிவு செய்யப்படலாம் என்று கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**அண்ணா காவியம்**

அடுத்தவாரம் முதல்
சுதந்திரனில்
ஆரம்பமாகிறது:
ஈழத்தமிழினத்தின்
புரட்சிக் கவிஞர்
**காசி. ஆனந்தன்**
எழுதுகிறார்!!
உங்கள் பிரதிக்கு
முந்திக்கொள்ளுங்கள்!

## நீரின்றித் தமிழர் வாழும் நிலையினைக் காண்பார் யாரே!

(கண்ணதாசன்)

நாடற்றவர் நலமற்றவர்
நடைகெட்டவரேனும்
வீடற்றவர் விதியற்றவர்
வீழ்வுற்றவரேனும்
பாடற்றவர் பணியற்றவர்
பாழ்பட்டவரேனும்
ஆடற்றமிழ் தாய்பெற்றவர்
ஆயின் இவர் தோழர்!

கண்ணில் ஒரு புண் வந்தபின்
கண்ணுக்கது பகையே!
எண்ணில் ஒரு கள்ளம்வரின்
எண்ணுக்கது கொலையே!
மண்ணில் ஒரு வஞ்சப்படை
வந்தாள்வது முறையோ
வண்ணத் தமிழ் மகனே உடன்
வருவாய் சமர் புரிவாய்!

கொஞ்சுங் குரல் எனினும் அது
குமுறும் குரல் அலவோ!
பஞ்சின் மொழி எனினும் அது
பண்பின் மொழி அலவோ
துஞ்சுந் தமிழ் பொங்கும் வகை
சொன்னார் அவர் சொன்னார்
அஞ்சும் பகை அலறும்படி
அண்ணா உரை சொன்னார்!

ஆண்டுக்கொரு புதுமைதரும்
அறிவுத் திருமாறன்
ஆட்சிக் கொரு வழி கூறிடும்
அரசுக் கலைவாணன்
மீண்டுந் தமிழ் முடிசூட
விரையும் படை வீரன்
மீட்சிக்கென வேல் தாங்கிய
வெற்றித் தமிழ் வேந்தன்!



வேறு

ஆய்ந்தொரு பொருளைத் தேடி
அளிப்பவர் தமிழர் நாட்டில்
தேய்ந்தநாள் பிறந்தீர் மீண்டும்
சிறப்புற வளர்த்தீர் தெற்கில்
ஓய்ந்ததோர் இனிமைப்பாட்டை
உயிர் பெறச் செய்தீர் இங்கே
மாய்ந்ததோர் தமிழை மீண்டும்
வாழ்வுற வைத்தீர் நீரே!

நீரின்றி நிலத்து மக்கள்
நீள் பசி தீராதன்றோ
காரின்றி நீரின் தேக்கம்
காண்பதும் அரிதேயன்றோ
வேரின்றி மரங்கள் வாழும்
வித்தையும் காணுமன்றோ?
நீரின்றித் தமிழர் வாழும்
நிலையினைக் காண்பார் யாரே?

## இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

தொடர்கதை

# எங்கே நீ போனாலும் அங்கே உன்னைத் தேடு!

## அத்தியாயம் (5)

பெரிய தங்க மோதிரம் அணிந்திருந்த விரல்களால் திறவு கோலைத்திருப்பி மோட்டாரை நிறுத்தி விட்டு ரகுவை ஏளனமாகப் பார்த்த ஏகாம்பரம், 'ம்...சேரவேண்டிய இடம் வந்து விட்டது. இறங்கிக் கொள் தம்பி' என்றார். ரகு பின்பக்கக் கதவில் கையை அழுத்தி அதைத் திறக்க முற்படுமுன்பே ஏகாம்பரம் இறங்கி அவனுக்காக அந்தப் பின்பக்கக் கதவைத் திறந்து விட்டார். ரகு இறங்கியபோது அவன் கால்கள் கம்பளி போன்று அழுத்தமாக வளர்ந்திருந்த புற்றரையின் மீது படிந்தன. அவன் மெதுவாக இறங்கி விட்டுச் சுற்றுப் புறமெல்லாம் பார்த்தான். அந்த இடம் பல பழமரங்கள் சூழ்ந்த ஒரு சோலை வனமாகக் காட்சியளித்தது. எதற்காக இவர் என்னை இந்த இடத்திற்கு அழைத்து வந்திருக்கின்றார் என்று சிந்திக்கத் தொடங்கினான் ரகு.

அவன் மனநிலையைப்பற்றிக் கிஞ்சித்தும் கவலைப்படாதவர் போல் தன்பாட்டுக்கு நடந்து கொண்டிருந்த ஏகாம்பரம் ஒரு வெளியான புல் மேட்டிற்கு வந்ததும் வானத்தை அண்ணாந்து பார்த்தபடியே தன் தூய வெள்ளைக் கைக்குட்டையைச் சட்டைப் பைக்குள் இருந்து உருவி எடுத்து நிலத்தில் விரித்துவிட்டு அமர்ந்து கொண்டார். 'மழைவரும் போல் தோற்றுகிறது என்று அவர் தன் பாட்டுக்குக் கூறியபோது 'சோ' என்ற இரைச்சலுடன் மரங்கள் அங்குமிங்கும் அசைந்து கொள்ளக் காற்றுப்பலமாக வீசத் தொடங்கியது. இந்த வேளைக்கும் அவரைப் பின் தொடர்ந்து வந்த ரகு நின்றபடியே எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான். இப்படி அமர்ந்து கொள் என்று அவர் தன் முன்நிலையில் சுட்டிக்காட்ட ரகு மறுவார்த்தையின்றி அமர்ந்து கொண்டான்.

விலை கொடுத்து வேதனையை வாங்கியது போல் சும்மா இருக்க முடியாமல் உமாவுடன் பழகப்போய்த் தனக்கு வந்த வேதனையை நினைத்துப் பார்த்தபோது 'ஓ' என்று வாய்விட்டுக் கதறி அழவேண்டும் போல இருந்தது ரகுவுக்கு. இருவரும் இருவேறு மனநிலையில் எதிரும்புதிருமாக பலத்த சிந்தனையுடன் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு மனநிலையில் மட்டுந்தானா வித்தியாசம்...? அவர்கள் உடை தராதரம், அந்தஸ்து எல்லாமே பல வழிகளிலும் வேறுபட்டவையாக இருந்தன.

அவனது ஏழ்மைநிலை எஞ்ஜினியர் ஏகாம்பரத்தை நிமிர்ந்து கூடப்பார்க்க முடியாத அளவுக்கு அவனை ஒரு கோழையாக்கி விட்டிருந்தது. அவரிடம் அவன் எந்தக் கேள்வியையும் கேட்க விரும்பவில்லை. கேட்கும் துணிவு அவனுக்கு இருக்கவில்லை. அவர் அவனை எதற்காக இத்தனை தூரம் சிரமப்பட்டுத்தன் சொந்தக்காரில் ஏற்றி வந்துள்ளார் என்பதையும் ஓரளவுக்கு அவனால் புரிந்து கொள்ள முடிந்தது அதனால்அவன் அவர் விதிக்கப்போகும் எந்தவிதக் கடுமையான சட்டத்துக்கும் அமைந்து நடக்கத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டான். சிங்கத்தின்மேல் தவறி விழுந்த சுண்டெலியின் கதையை அவன் தன் பிள்ளைப் பராயத்திற் படித்திருந்தான். இப்போது அதே சுண்டெலியாகத் தன்னை உருவகப் படுத்திக் கொண்டான்.

ஏகாம்பரத்தின் முகத்தில் ஒரு வெற்றிப் பெருமிதம் சுடர்விட்டுப் பிரகாசித்தது. ஒரு நல்லாசிரியன் முன் கை கட்டி வாய் புதைத்து நிற்கும் ஒரு கீழ்ப்படிவுள்ள மாணவனாக ரகு அவர்கண்களுக்குத் தோற்றமளித்தான். தன் மகளினது உள்ளக்கிடக்கையை அறிந்தபோது அவர் அடைந்த ஏமாற்றம் துன்பம் எல்லாம் இப்போது ஒரு நொடிப் பொழுதிற்குள் அவர் மனதை விட்டு அகன்றன. ரகுவைச் சந்தித்துப் பேசுவதற்கு எப்படி ஒரு சந்தர்ப்பத்தை உண்டாக்கலாம். அவனிடம் பேச்சை எப்படி ஆரம்பிப்பது...... அதற்கு அவன் என்ன பதில் சொல்வான் என்றெல்லாம் கடந்த இரண்டு மூன்று நாட்களாக அவர் தன் மண்டையைப் போட்டு உடைத்துக்கொண்டிருந்ததற்குத்தக்க பலன் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தார். ஏதோ ஒரு பெரிய சாதனையை நிலைநாட்டப் போவதாக எண்ணி வந்தவருக்கு ரகுவைக் கண்டதும் அது வெறும் சிம்பிளாகத் தோன்றியது. அதனால் அவர் அவனை ஒருமுறை மேலிருந்து கீழ்வரை நன்றாக உற்றுப் பார்த்து விட்டு ஒரு புன்சிரிப்புடன் ஆரம்பித்தார்.

''தம்பி நீ வயது வந்த பிள்ளை. உலகவிடயங்களைப் பற்றி ஓரளவுக்கு அநுபவம் அடைந்திருக்க வேண்டும் என நினைக்கிறேன். இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு அதையெல்லாம்புட்டு விரித்துக் கூற வேண்டிய அவசியமில்லை என்பது எனக்குத் தெரியும். அதனால் நான் உன்னை அழைத்த விடயமும் ஓரளவுக்கு உனக்குப் புரிந்திருக்கலாம்! புரிந்திருக்க வேண்டும், என்று அவர் சிறிது நிறுத்தியதும் ஏற்கெனவே பயந்துபோயிருந்த ரகுவின் உடல் வெளிப்படையாகவே நடுங்கத் தொடங்கியது. தன் எண்சாண் உடம்பும் கூனிக்குறுக அவன் முதற்தடவையாக அவரை நிமிர்ந்து பார்த்தான். அந்தப் பார்வை எனக்கு எல்லாம் புரிகிறது என்று கூறாமல் கூறியது.

'உன்னைப் பார்க்கும்போது நான் நினைத்திருந்த அளவுக்குக் கெட்ட பிள்ளையாகத் தோன்றவில்லை. முகத்தில் நல்ல பிள்ளையின் அறிகுறிகள் தோன்றுகின்றன. நீ படித்தவன் பண்புள்ளவன். உங்கள் குடும்பத்துக்கு ஒரு குத்து விளக்குப் போன்றவன். உன் முகத்தில் ராஜகளை தோன்றுகிறது. உன்னைப் பார்த்தபின் உனக்கு அதிகம் எடுத்துக் கூறவேண்டும் என்ற அவசியம் எனக்குத் தென்படவில்லை. எங்கள் குடும்ப கௌரவத்தைப் பற்றி நீ நன்கு அறிந்திருப்பாய். இளவயதில் ஆண் பெண்ணாகிய இருபாலாருக்கும் பல சபலங்கள் வாழ்க்கையில் ஏற்படுவது சகஜந்தான் ரகு. ஆயினும் சபலங்களை சபலங்களாகவே நினைத்து ஒதுக்கிவிடுவது தான் புத்தி சாலித்தனம். அதைவிடுத்து அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப் புகுந்தால் வாழ்க்கையே கேள்விக் குறியாக மாறிவிடும். எங்கள் குடும்பத்திற்கும் உங்கள் குடும்பத்திற்கும் இடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகளை நீ அறிந்திருப்பாய். என் குடும்ப கௌரவத்தை நிலைநாட்டுவதற்கு எனக்குள்ள ஒரே பெண் உமாதான் ரகு. அவளுடைய எதிர்கால வாழ்வைப் பற்றி நான் ஆயிரமாயிரம் மனக்கோட்டைகள் கட்டி வைத்திருக்கிறேன். தயவு செய்து அவற்றையெல்லாம் இடித்துக் கொட்டி விடாதே அப்பா. என் மகள் உன்னைப் பற்றி அதிகமாக நினைத்துக் கொண்டிருக்கிறாள். அப்படி நினைக்கக் கூடிய அளவுக்கு நீ அவளை மாற்றி விட்டிருக்கிறாய். அவள் உள்ளத்தில் அப்படியான ஒரு சபலத்தை உண்டாக்கியது நீ செய்த மன்னிக்க முடியாத பெரிய தவறாகும் ரகு.

பெரிய இடத்துப் பெண் தாரத்துப் பச்சை எனப் பூரணமாக உணர்ந்திருந்தும் அவள் அன்பைப் பெறமுயற்சித்தது நீ செய்த மாபெருந் துரோகமப்பா. நீ உன் குடும்ப நிலையை உத்தேசித்தாவது உன் மன ஆசைகளைக் கட்டுப்படுத்தியிருக்கலாம். நீ இவ்வளவு கேவலமாக நடந்து கொள்வாய் என்று உன்னைப் பார்த்தபின் என்னால் நம்பவே முடியவில்லை. என் மகள் எனக்கு உள்ள ஒரே வாரிசு என்ற காரணத்தால் சிறிது செல்லமாக வளர்க்கப்பட்டவள். அவளது ஆசை அபிலாட்சைகளுக்கு இது வரை நாங்கள் தடை செய்தது கிடையாது. அந்த ஒரு காரணத்தைக் கொண்டு அவள் உன் மீது அன்பு செலுத்தி விட்டாள். அந்த அன்புக்கு நாங்கள் குறுக்கே நிற்க மாட்டோம் என்று நினைத்திருக்கிறாள். ஆனால் நான் அவளது இந்த ஆசைக்குத் தடை போட்ட பின்னர்தான் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறாள் அவள். இப்போது உன்னையே திருமணஞ் செய்து கொள்ள வேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்கிறாள். ஆனால் இது நடக்காது ரகு. நடக்க முடியாத ஒன்று. இந்த நிலையில் எங்கள் குடும்பத்தில் ஏதாவது துர்ச்சம்பவங்கள் நடக்குமாக இருந்தால் அந்தப் பழியும் பாவமும் உன்னையே சாரும்.

ஆமாம் ரகு! ஒரு குடும்பத்தைக் கலைத்த பாவம் உன்னைச் சும்மா விடாது. ஆகவே இப்போது உன்னிடம் நான் இரந்து கேட்பதெல்லாம் தயவு செய்து என் மகளுடைய மனதை இனிமேலும் குழப்பாதே. அவளை மறந்து விட்டு எங்காவது ஓடிவிடு. எனக்காக அல்லாவிட்டாலும் என் மகள் உமாவுக்காக நீ இந்த உதவியைச் செய்வாய் என்ற நம்பிக்கை எனக்குண்டு. நீ எந்த ஊருக்குப் போக விரும்புகிறாயோ அந்த ஊருக்கு உனது வேலை மாற்றத்தைப் பெற்றுத்தருவது என் பொறுப்பு. இந்த உதவியை மட்டும் நீ செய்தால் உன்னை என் உயிர் உள்ளளவும் நான் மறக்கமாட்டேனப்பா. அதேசமயம் நான் உன்னிடம் வேண்டிக் கொள்ளும் மற்றொன்று என்னவென்றால் உனக்கு ஏற்படும் இந்த ஏமாற்றத்தால் என் மகளது வாழ்வுக்கு ஏதாவது மாசு கற்பித்து விடாதே. இதற்காக நீ எவ்வளவு பணங் கேட்டாலும் நான் அந்தத் தொகையைத் தர ஆயத்தமாக இருக்கிறேன் ரகு.'

ஒரு பெருமூச்சுடன் அவர் கூறிமுடித்தபோது ரகுவின் உள்ளம் வேதனையாற் துடித்தது. அவர்கள் மனநிலைக்கு ஏற்றவாறு அவர்கள் அந்த இடத்திற்குவரும் போது சற்றுப் பலமாக வீசிக் கொண்டிருந்த காற்றுப் புயலாக மாறுவதற்குரிய அறிகுறிகள் தோன்றிக் கொண்டேயிருந்தன. ஏகாம்பரம் ஆகாயத்தையும் மரங்களையும் அண்ணாந்து பார்த்துக் கொண்டேயிருந்தார். மரக்கிளைகள் எல்லாம் பயங்கரமாகச் சுழன்றடிக்கத் தொடங்கின. அதைவிட வேகமாகக் குமுறியது ரகுவின் மனநிலை. புயலுக்கு முன் அமைதி தோன்றுவது போல அதுவரை அவர் கூறுவதற்கெல்லாம் தலையசைத்துக் கொண்டு மௌனமாக அமர்ந்திருந்த ரகு திடீர் என ஏதோ நினைத்துக் கொண்டவன்போல 'ஸார்' என்றான்.

அவன் குரலில் சினத்தின் சீற்றம் வெளிப்பட்டது. 'நீங்கள் குலத்திலும் பணத்திலும் உயர்ந்தவராக இருக்கலாம். அதை நான் மறைக்கவுமில்லை; மறுக்கவுமில்லை. எல்லாவகையிலும் நாங்கள் உங்களுக்குத் தாழ்ந்தவர்கள் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆயினும் எங்களுக்கும் ஒரு கௌரவம் மனச்சாட்சி என்பன உண்டென்பதைத் தயவு செய்து நீங்கள்மறந்துவிடக்கூடாது. நாங்கள் ஏழைகளாக இருக்கலாம். தாழ்ந்தவர்களாக இருக்கலாம். ஆயினும் மானம் என்பது இன்னும் எங்களைவிட்டு அகலவில்லை. அது ஒன்று தான் நாங்கள் பெற்றிருக்கும் அருஞ்செல்வம். ஏதோ விதியின் கொடுமையால் நடக்கக் கூடாத ஒன்று நடந்துவிட்டது...... அதை அசம்பாவிதமாக நடந்த ஓர் துர்ச்சொப்பனமாகவே மதித்து மறந்துவிட முயற்சிக்கிறேன். மறக்கக் கூடியனவல்ல நினைவுகள். ஆயினும் மறப்பது போல் நடிக்கிறேன். அந்த நடிப்புக் கூட உங்களுக்குப்பயந்தல்ல ஸார். ஆனால்—ஆமாம்! ஆனால் உங்கள் மகள் மீது நான் வைத்திருக்கும் மாசற்ற புனிதமான அன்புக்காகத்தான் என்பதை இவ்விடத்தில் நான் வற்புறுத்திக் கூறுவதற்காக என்னை மன்னித்து விடுங்கள். உமா அடையப் போகும் நல்வாழ்வுக்குக் குறுக்கே நிற்க நான் விரும்பவில்லை. அவளை நான் உண்மையாக நேசிக்கிறேன். அதனால் அவளது நல்வாழ்வுதான் எனக்கு முக்கியமானதாகும். உங்களிடம் பணம் அளவுக்கதிகமாக இருக்கும் பட்சத்தில் அதைப் பத்திரப் படுத்தி வையுங்கள். வேறு ஏதாவது நல்ல சேவைகளுக்குப் பயன்படலாம். எனக்குப் பணம் தேவைப்படாது. ஆண்டவன் எனக்கு அளித்திருக்கும் ஐஸ்வரியமாகிய குணத்தைக் கொண்டு சொல்கிறேன் என்உடலில் உயிர் உள்ளவரை உங்களுக்கோ உங்கள் மகளுக்கோ எந்த விதத் தீங்கும் ஏற்படப் போவதில்லை. இது சத்தியம்......நான் வருகிறேன் ஸார்.........!'

கூறிவிட்டு விறிச் சென வேகமாக நடந்தான் அவன்.

'நில்லப்பா......ஏய் தம்பி நில்......மழை வரப்போகிறது. காற்றுவேறடிக்கிறது! என் காரிலேயே உன்னைக் கொண்டுபோய் விடுகிறேன்......ஏகாம்பரம் அவனைப் பின் தொடர்ந்தார்.

'வேண்டாம் ஸார்......! உங்களுக்கு ரொம்ப நன்றி! நீங்கள் நினைத்து வந்த காரியம் வெற்றிகரமாக ஒப்பேறிவிட்டது. இனி உங்கள் மோட்டாரில்ஏறிக்கொள்ள எனக்கு எந்தவிதமான தகுதியும் இல்லை. நீங்கள் சந்தோஷத்தோடு சௌகரியமாகப் போய்வாருங்கள்' வெடுக்கெனக் கூறிவிட்டு விறுக்கென நடந்தான் ரகு.

அவன் நடந்து சென்ற வேகத்தில் அசைவதுபோல் அந்தச் சாலையின் இருமருங்கிலும் நின்ற விருட்சங்கள் சுழன்றடித்து அசைந்தன. ஆனால் சிறுகச் சிறுக அந்தக் காற்றின் வேகம் அதிகரிக்கத் தொடங்கிய போது அந்த மரங்கள் ஒடிந்து தன் மேல் விழுந்து விடுமோ என்ற பயத்தில் அவன் இன்னும் விசையாக நடக்கத் தொடங்கினான். ஆனாலும் அந்தக் காற்றுக்கோ அல்லது மரங்கள் அசைந்த வேகத்தில் தனக்கு அடுத்த நிமிடம் என்ன நடக்குமோ என்ற பயம் அவனுக்கு அணுவளவேனும் இருக்கவில்லை. காதலில் ஏற்பட்ட தோல்வி கீழ்க்குடிப் பிறப்பு, வறுமையின் நிமித்தம் ஏற்பட்ட அந்தஸ்துக் 'குறைவு ஆகியவை அவனை மரமே என்மேல் முறிந்து விழுந்து என் உயிரை எடுத்து விடு' என்று பைத்தியக்காரனைப் போலப் பேசவைத்தது.

வழியில் நிறைந்திருந்த காரிருள், திடீர் என எழுந்த காற்றின் வேகம், தனிமையான சூழ்நிலை ஆகியன ஏற்கெனவே வலிகுன்றிப் போயிருந்த அவன் உடலையும் உள்ளத்தையும் வாட்டிப் பிழிந்தது. அவன் அணிந்திருந்த நூல்வேட்டி ஒரு புறம் காற்றோடு சேர்ந்து இழுபட, அவன் மேனியை அலங்கரித்த டெறலின் ஷேட் காற்றில் பறந்து படபடத்தது. தன் ஒருகையால் வேட்டியை இழுத்துப் பிடித்துக்கொண்டு மறுகரத்தால் எதிர்ப்புறம் தன்மேல் காற்றுக்கு அசைந்துபடிந்த மரக்கொடிகளையும் செடிகளையும் அகற்றிக் கொண்டே அயர்ந்துசோர்ந்து தள்ளாடிய நிலையில் வெறுங்கையோடு இலங்கை புகுந்த இராவணனைப்போல அவனும் தனது வீட்டையடைந்தான்.

விளக்கேற்ற முன் வீடு திரும்பும் பழக்கமுடைய ரகு அன்று அதுவரை வீடு திரும்பாதது கண்டு சின்னையாவின் மனதில் ஒரு அச்சம் ஏற்பட்டது. அன்று எதிர்பாராத விதமாக அடித்துக் கொண்டிருந்த சுழல் காற்று அவர் அச்சத்தை அதிகரித்தது. போதாததற்கு அன்று அதிகாலையில் கடலுக்குச் சென்றிருந்த அவருடைய மக்கள் இருவரும் வீடுதிரும்

(9-ம் பக்கம் பார்க்க)

பா.பாலேஸ்வரி



# அண்ணா வாழ்விலே..!

**அறுபது ஆண்டுகள் நம்மிடையே வாழ்ந்து—செயற்கரிய செய்து — தமிழகத்திற்கே விழியோட்டி வழிகாட்டிய ஆசானும் அறிஞர் அண்ணாவின் வாழ்க்கையிலே சிந்தனையைக் கிளறும் சிறப்பு நிகழ்ச்சிகள் ஆயிரக்கணக்கிலே இறைந்து கிடக்கின்றன அவை ஒவ்வொன்றும் ஒரு நூல் - ஒரு இலட்சியம்—ஒரு பள்ளி—காலமெல்லாம் பாதுகாத்துப் பயனடையவேண்டிய நிதி! அவற்றின் தொகுப்புதான் இந்தச் சிறப்புப் பகுதி!**

அண்ணா அரசியல் வானில் ஒரு விடிவெள்ளி! சமுதாயப் பாலைவனத்தின் ஒரு நீர் ஊற்று! பழம் புரட்டுகளால் புழுங்கிப் பாழடைந்த தாயகம் கண்ட மணிமண்டபம்!

தொழிலாள தோழர்களுக்கு அவர் நம்பிக்கையூட்டும் நட்சத்திரம்! ஏய்த்துப்பிழைக்கும் எத்தர்களுக்கு அவர் எமன்! மதவாதிகளின் கண்களுக்கு அவர் வைரி! மாற்றுக் கட்சித் தோழர்களுக்கு புரிந்து கொள்ள முடியாத புதிர்! சமுதாய சாக்கடையில் நெளிந்து கொண்டிருக்கும் புழுக்களைக் கொல்லும் ஒப்பற்ற மாமருந்து!

வானத்திற்கு அழகு வட்ட நிலா! காதுக்கின்பம் யாழொலி! தமிழுக்கு அழகு தனித்து நிற்கும் சக்தி! தமிழகத்தின் தனிப் பெரும் பெருமைக்கழகு நம் அறிஞர் அண்ணா!

அண்ணா, பாலகனுக்கு ஒரு உறவு முறை! பள்ளி பயில்வோனுக்கு ஒரு உறுதுணை! பகுத்தறியும் நிலைகொண்ட கட்டிளங் காளைகளுக்கு அவர் நல்லதொரு வழிகாட்டி! பாராளப் பிறந்தவர்கள் நாங்கள் தான் என விண்கர்வங் கொண்டவர்களுக்கு அவர் ஒரு சவுக்கடி! அவர் வழி செல்ல ஆசைப்படுவோர்களுக்கு அவர் ஒரு நல்ல வழி காட்டி!

அண்ணா, இருண்ட வானில் தோன்றிய தாரகை! என்றும் தமிழர் நலத்திற்காக முழங்கிக் கொண்டிருக்கும் பேரிகை! பேரிகை கொட்டும் அந்தப்பேரறிவாளனைப் பின் தொடர ஆயிரமாயிரம் இளம் உள்ளங்கள்!

## காஞ்சி தந்த கருவூலம்

'அத்தகைய ஆசைத் தம்பிகளின் மூத்த அண்ணன், உறவு என்ற சொல்லுக்கே புதிய உயிர்கொடுத்த குடும்பத்தின் மூத்த அண்ணன் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்தது காஞ்சியில்.

1909-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 15-ம் நாள் (தமிழ் ஆண்டு-சௌமிய ஆண்டு-ஆவணித் திங்கள்—30-ம் நாள்) அவர் பிறந்தார்.

மிக எளிய குடும்பத்தில் திருவாளர் நடராசன், திருமதி பங்காரு அம்மாள்-ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்.

அண்ணா பிறந்தபோது 'அதிசய மனிதர் பிறந்திருக்கிறார்' என்று வால் நட்சத்திரம் தோன்றவில்லை. எதிர் காலத்தில் இந்த வையகமே போற்றக்கூடிய ஒரு அரசியல் மேதையாகத்திகழப்போகிறார் என்று கோள் நிலைகள் கூறவில்லை.

அண்ணாவின் பெற்றோர்களும்—வளர்ப்புத் தாயாகவும், தாயைவிட அதிக அக்கறையுடன் அண்ணாவின் நலத்தில் நாட்டங்கொண்டவருமான, அண்ணாவின் சிறிய தாயாராகிய தொத்தாவும், தெய்வ பக்தியும்—மத நம்பிக்கை ஆர்வமும் கொண்டவர்கள்.

இன்று பகுத்தறிவு இயக்கத்தின் தனிப் பெரும் சுடராய் ஒளி விடுகின்ற அண்ணா இளமைப் பருவத்தில் ஆலய வழிபாட்டைத் தவற விடாத இளைஞராகத்தான் திகழ்ந்து கொண்டிருந்தார்.

ஆலய வழிபாட்டில் நுழைந்த அண்ணா, அதிலும் ஒரு புதுமையைக் கையாண்டார். எந்தக் கோயிலில் கூட்டம் அதிகம் இருக்குமோ அங்கு செல்லாமல், கூட்டம் குறைவாக உள்ள கோயிலுக்குச் சென்று தெய்வ வழிபாடு செய்தார்.

அண்ணா, தம் ஆரம்பக் கல்வியை அருகிலுள்ள பச்சையப்பன் ஆரம்பப்பள்ளியில் துவக்கினார். அதுமுதல் தம் உயர்தர பள்ளிப் படிப்பு முடியும்வரையில் அவர் அங்கேயே படித்தார்.

இன்று தமிழகத்தின் தலைசிறந்த தலைவர்களில் முதல்வராகத் திகழ்வது போலவே, அன்றும், பச்சையப்பன் பள்ளி வகுப்பு மாணவர்களில் முதல்வராகவே விளங்கினார்!

பள்ளிக்குச் செல்லும் பொழுதெல்லாம் மாட்டு வண்டியிலேயே செல்வார். அதிலும் ஒரு பெருமை என்னவென்றால், இன்றைய காங்கிரசின் தேர்தல் சின்னமாகவிளங்குகின்ற மாடுகளின் மூக்கணாங் கயிற்றைத் தன் கையில் வைத்திருப்பது போல, இளம் பருவத்தில் வண்டியில் பூட்டப்பட்டிருக்கும் மாட்டின் மூக்கணாங்கயிற்றைப் பிடித்திழுத்து வண்டியைத் தானே ஓட்டிக்கொண்டு செல்வார்!

## அண்ணாவின் விளையாட்டுகள்

இளமையில் தீராத விளையாட்டுப் பிள்ளையாகத்தான் விளங்கியிருக்கிறார், அண்ணா.

கேரம் விளையாடுவதில் அண்ணாவுக்கு அளவுகடந்த ஆனந்தம். ஓய்வு கிடைக்கின்ற நேரங்களிலெல்லாம் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு கேரம் விளையாடுவார்.

> ### அண்ணா ஒரு சிற்பி
>
> **திருலோக சீதாராம்**
>
> பேச்சுக்கு ஒரு கலைஞன்<br>
> பேசுங்கால் அதிரவரும்<br>
> ஏச்சுக்குப் பணிவறியா<br>
> எண்ணத்து ஒரு சிற்பி
>
> சொல்லின் சிலம்பசைத்தாற்<br>
> சோதி மணிப்பரல் சிதறும்<br>
> சொல்லிற் கருவுயிர்க்கும்<br>
> செம்பொருளிற் சொல்சிறக்கும்
>
> அண்ணாவென்றே இளைஞர்<br>
> அன்போடரு களைவார்<br>
> பண்புடைய சொல் ஒன்றாற்<br>
> பச்சையன்பு பாய்ச்சிடுவார்

அண்ணா சீட்டாடுவதையும் பொழுது போக்காகக் கொண்டிருந்தார். மற்றும் நண்பர்களுடன் உட்கார்ந்து மணிக்கணக்கில் உரையாடிக்கொண்டிருப்பதிலும் ஒருவகைப் பேரின்பத்தைக் கண்டார்.

அண்ணாவின் பொழுது போக்கு நிகழ்ச்சிகளைக் கவனிக்கிறபோது, அவைகள் ஒவ்வொன்றும் நண்பர்களின் கூட்டணியாகவே இருப்பதைக் காணலாம். தான் மகிழ்வதோடல்லாமல் தன்னோடிருப்பவர்களையும் மகிழ்விப்பவராகவே திகழ்ந்திருக்கிறார். அண்ணாவின் திருவாய்மொழிகளைக்கேட்டு மகிழ்வதிலே அவரது நண்பர்களுக்கு மட்டிலா மகிழ்ச்சியாகவே இருந்திருக்கவேண்டும்.

## தேர்வுக்குத் தேவை பொடி

பள்ளிப்படிப்பு படிப்படியாக வளர்ந்து முடியும் கட்டத்தை நெருங்கியது. இறுதி வகுப்பில் தேர்வு எழுதிக் கொண்டிருந்த சமயம் ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

இன்று பல்லாயிரக் கணக்கான மக்கள் அவரைச் சூழ்ந்து நின்று, வாய் பிளந்தபடி, அண்ணாவின் அழகு தமிழ்ப் பேச்சைக் கேட்டு, கண்ணிமை மூடாமல் அவர் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கின்ற சமயத்திலும், அனைவரும் கவனியாமல், ஒரு சிமிட்டா மூக்குப்பொடியை எடுத்து நாசுக்காகப்போட்டுக் கொள்வதுண்டல்லவா?

இதே முறையை அன்று பள்ளி இறுதித் தேர்வு எழுதுகின்றபோதும் அண்ணா கையாண்டிருக்கிறார். பையினுள் கையை விட்டு பொடி மட்டையைத் தேடியெடுத்து, ஒரு கையால் முகத்தை மறைத்துக்கொண்டு மற்றொரு கையை முகத்தருகில் கொண்டு செல்வதைப் பார்த்து விட்டார், ஒரு ஆசிரியர்.

செய்யக்கூடாத குற்றம் செய்து விட்டவரைக் கண்டுபிடித்து விட்டதைப்போல் நினைத்துப் பெருமைப்பட்டு, அண்ணா மற்றவர்கள் எழுதுவதைப் பார்த்து எழுத முனைந்ததாகக் குற்றம் சாட்டினார்.

ஆசிரியரின்குற்றச்சாட்டுக்கேட்டு அண்ணா புன்னகை புரிந்தார். மெதுவாகத் தன் பையிலே கையைவிட்டு, பொடி மட்டையை வெளியில் எடுத்துக் காட்டினார். 'தேர்வைத் திறம்பட எழுத வேண்டுமானால் இது ரொம்பவும் அவசியப்படுகிறது. ஆகவே தயவுசெய்து இதைப் பற்றி யாருக்கும் சொல்லாதீர்கள்' என்று ஆசிரியர் அவர்களிடம் அண்ணா நயமாகக் கேட்டுக் கொண்டார்,

## பெரியாரைநாடிய 'பெரியார்'

அண்ணாவின் உயர்நிலைப் படிப்பு முடியப் போகும் காலத்தில்தான் தமிழ் நாட்டின் தலைவிதியைமாற்றியமைக்க சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்த தலைவர், வெண்தாடிவேந்தர், பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் சுயமரியாதை இயக்கக் கருத்துக்கள் நாட்டில் மழை போல் பொழிந்து கொண்டிருந்தன!

ஈரோட்டுப் பாசறையிலிருந்து தந்தையார் எழுப்பிய குரலொலி, மதங்களையும், கடவுள்களையும் மக்களிடம் மண்டிக் கிடக்கும் மூடப்பழக்க வழக்கங்களையும் திராவிடமக்களை அடிமையெனக் கருதி, அவர்தம் முதுகிலேறி அமர்ந்து கொண்டிருப்பவர்களையும் தாக்குவனவாக இருந்தது.

பெரியாரின் பிரச்சாரத்தில் அண்ணாவும் நாட்டம் கொண்டார், தந்தை பெரியாரிடம் ஒருதனியான பற்றும்-பாசமும் அண்ணாவின் உள்ளத்தில் குடிபுகுந்து கொண்டுவிட்டது.

அண்ணாவின் அறிவுத்திறன், சிந்தனைச் சுடரொளி, பேச்சு வன்மை, எழுத்தாற்றல் ஆகியவைகள் கல்லூரியில் அண்ணா காலடி எடுத்து வைத்தபின்னர் தான் சுடர்விட்டுப் பிரகாசித்தது.

சென்னை நகரத்தில் சைனாபஜாரில் தற்பொழுது இருக்கும் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, முன்பு பச்சையப்பன் கல்லூரியாக விளங்கிற்று. அந்தக் கல்லூரியில்தான் அண்ணா கல்லூரிப் படிப்பை மேற்கொண்டார்.

கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும் போதே 1930-ம் ஆண்டில், அண்ணா அவர்களுக்குத் திருமணம்செய்துவைத்து, தங்களது கண்களைக் குளிரவைத்துக் கொண்டனர் அவரது குடும்பத்தினரும், உற்றார் உறவினர்களும்.

தமிழகம் போற்றுகின்ற தவப்புதல்வராகிய அண்ணாவுக்கு அவரின் குணப் பண்பறிந்து நடந்து கொள்ளுகின்ற குணவதியாக, பெண்ணின் பெருமையை விளக்குகின்ற பெட்டகமாக, குடும்ப விளக்காக அமைந்த வாழ்க்கைத் துணைவியாரின் பெயர் இராணி என்பதாகும்.

இராணி என்பது பெயரளவோடு நின்று விடவில்லை. அண்ணாவின் குடும்பத்தில் அவர் ராணியாகத்தான் விளங்கினார். ராணி என்ற பெயர் காலப்போக்கில் குறைந்து, அண்ணாவின் ஆயிரமாயிரம் தம்பிகளால் அண்ணி என்றே அழைக்கப்படலாயிற்று.

(10-ம் பக்கம் பார்க்க)

## எண்ணம்

# கண்ணீரைத் துடைப்பீர்! கடமையை ஆற்றுவீர்!!

உலகத் தமிழர்களின் உள்ளங்களிலெல்லாம் நம்பிக்கையூட்டிக் கொண்டிருந்த எழுஞாயிறு வீழ்ந்து விட்டது.

உலகத் தமிழர்களையெல்லாம் அணைத்து நின்ற அன்னையின் கரம் செயலிழந்து விட்டது:

தமிழர்களின் வாழ்வில் புதிய அத்தியாயம் சமைக்க அத்திவாரமிட்ட இனிய உள்ளம் உறங்கி விட்டது.

தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு என்பதை அகில உலகமும் அறியச் செய்த ஒப்பற்ற திருமேனி சாய்ந்துவிட்டது.

பேச்சும் மூச்சும் செயலும் தமிழே என்று வாழ்ந்த வீரத்திருவுருவம் வீழ்ந்துவிட்டது!

தமிழுக்காக சிறையிலிருந்து சித்திரவதைப்பட்ட விடுதலைச் சிங்கத்தின் குரல் ஒடுங்கிவிட்டது:

ஆம், தன் இனப் பெருமைகளையெல்லாம் மறந்து, சாய்ந்தாற் சாய்கிற பக்கம் சாய்கிற செம்மறிக் கூட்டம் போல் வாழ்ந்து வந்த தமிழினத்தவரைத் தட்டியெழுப்பி, தமிழுணர்வையூட்டி, புதிய பாதையிலே அழைத்து வந்த காஞ்சி தந்த கரிபால்டி- தமிழகத்தின் இங்கர்சால்-பல்லவ நாட்டுப் பகுத்தறிவுச் சிங்கம்-தென்னாட்டுப் பெர்னாட்ஷா பேரறிஞர் அண்ணா மறைந்து விட்டார்.

தாயைப் பறிகொடுத்த கன்று போல்-சிறகைப்பறி கொடுத்த புள்ளுப் போல் - நீர்வற்றிய குளத்தில் சிக்கிய மீன் போல்-உலகெங்கும் வாழும் தமிழர்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இலட்சியபுரியை நோக்கி அழைத்து வந்தாய்-இடையிலே எம்மையெல்லாம் திக்கற்றவராக்கிவிட்டுஎங்கே சென்றுவிட்டாய் அண்ணா-என்று கதறித்துடித்து கண்ணீர் வடிக்கிறார்கள் திராவிட மக்கள். அவர்கள் கண்களெல்லாம் அழுதழுது விழிநீர் வற்றி விட்டன. இப்பொழுது அழக்கூடிய சக்தியையும் இழந்துவிட்டனர்.

எப்படித்தான் அழுதாலும் புரண்டாலும் ஆற்றொணாத சோகம் இது, மாற்றொணாத துயரம் இது. ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு இது!

அறிஞர் அண்ணா இந்தத்தலை முறையின் ஈடிணையற்ற தலைவன். பன்னூறு ஆண்டுகளாக அண்ணா போன்ற தலைவன் தமிழர்களிடையே தோன்றியதில்லை!

அறிவும் ஆற்றலும் மதிநுட்பமும், தூய்மையும் எளிமையும் கனிவும், பாசமும் நிறைந்த தங்கச்சுரங்கமாகத் தமிழர்களுக்கு அண்ணாவைத் தந்த ஆண்டவன், அண்ணாவின் பணி முழுமைபெறுவதற்கு முன் அவரைத் திரும்பி அழைத்துக்கொண்டது மிகமிகக் கொடூரமான தாங்க முடியாத ஒரு செயல்தான்.

தமிழக ஆட்சியைக் கைப்பற்றி 23 மாதங்களுக்கிடையில் தமிழர் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பல காரியங்களை சாதித்து விட்ட அண்ணா, இன்னும் குறைந்தது 10 ஆண்டுகளுக்காவது உயிர் வாழ்ந்திருப்பாராயின், தமிழர் துயரமெல்லாம் தீர்ந்திருக்கும்—உலகில் "முன் தோன்றி மூத்த குடியான" தமிழினம் மீண்டும் முன்னணிக்கு வந்திருக்கும்.

ஆனால் நடக்கக் கூடாதது நடந்து முடிந்து விட்டது. இருக்க வேண்டியவர் உயிர் பறிக்கப்பட்டு விட்டது. இயற்கையின் நியதிகளையும், விசித்திரங்களையும் யாரே அறிவார்?

ஆகவே இனியும் கண்களைக் கசக்கிக் கொண்டு நிற்பதால் அண்ணா திரும்பி வந்து விடப் போவதில்லை. அண்ணா அவர்களுக்கும் இது பிடிக்காத ஒன்று.

அண்ணா மறைந்தாலும், அவர் வகுத்துச் சென்ற பாதை தெளிவாகத் தெரிகிறது." இலட்சியங்கள் துல்லியமாகத் தெரிகின்றன. அந்த இலட்சியங்களை நோக்கி அண்ணா வகுத்துத் தந்த பாதையிற் செல்வதற்கு, அண்ணாவின் எழுத்துக்கள், கருத்தோவியங்கள், சிந்தனைகள் ஒளி விளக்காக வழிகாட்டுகின்றன. அண்ணா அளித்த முப்பெரும் படைக் கலங்களாக கடமை, கண்ணியம் கட்டுப்பாடு விளங்குகிறது.

தமிழினம் உலகில் தனித் தன்மையுடன் மீண்டும் வாழ வேண்டும் — திராவிட பூமி பண்டைப் பெருமைகளையடைய வேண்டும்—தமிழ் உயர் தனிச் செம்மொழியாக உலக மொழி என்ற அந்தஸ்தை யடையவேண்டும்— மூடக் கொள்கைகள் ஒழிந்து சாதி சமய பற்ற பகுத்தறிவாளர்களாக மைந்தமிழர் வாழ வேண்டும்— தமிழ்க்கலை கலாசாரம் சிறக்க வேண்டும். இவையே அண்ணாவின் இலட்சியங்கள்.

வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அண்ணாவின் இந்த இலட்சியங்கள் நிறைவேற தமிழர்கள் பாடுபடுவார்களாக!

# "விதியே விதியே!! தமிழச்சாதியை என்செயக்கருதி இருக்கின்றாய்?"

ஆறு கோடி திராவிட மக்களை அரவணைத்து நின்ற மாபெரும் ஆலவிருட்சம் வேரோடு சாய்ந்து விட்டது!

பேரறிஞர் அண்ணா மறைந்து விட்டார்.

தமிழர் வரலாற்றில் ஒரு சகாப்தம் முடிந்து விட்டது!

தமிழ், தமிழர், தமிழ்நாடு -இம் மூன்றுக்காகவும் ஓயாது ஒழியாது உழைத்த அண்ணாவின் வாழ்க்கை தமிழ் மண்ணோடு தமிழ் மண்ணாக கலந்து விட்டது.

அவரது உயிர் தமிழுடன் கலந்து விட்டது.

ஆம், அண்ணாவின் உயிர் தான் தமிழ். தமிழ் தான் அண்ணாவின உயிர்.

ம. பொ. சி. கூறியது போல தமிழுடன் தமிழாக அண்ணா இணைந்து விட்டார்.

அப்படியானால் அண்ணா இறந்து விட்டதாகக் கூறுவது எவ்வளவு அபத்தமான "பொய்"!

தமிழ் மொழி இவ்வுலகில் தலைநிமிர்ந்து வாழுகின்றது என்றால் அண்ணா அங்கே வாழுகிறார் என்பதுதானே அர்த்தம்?

தமிழ் நாடு தன்னிகரற்று சிறந்தோங்கி விளங்குகிறது என்றால், அண்ணா அங்கே சிறப்புறுகிறார் என்பது தானே அர்த்தம்?

அண்ணா கட்டிக்காத்த கொள்கைகள் — எடுத்துக் கூறிய அறிவுரைகள், அத்தனையும் தமிழர் நெஞ்சமெல்லாம் இன்று நீக்கமற நிறைந்து விட்டது!

அண்ணாவின் இலட்சியங்கள் தமிழர் தம் உயிரோடு உணர்வோடு ஊனோடு இரண்டறக்கலந்துவிட்டன.

அறிஞர் அண்ணாவாம் அண்ணா, இவருக்கு யார் அறிஞர் பட்டம் கொடுத்தார்கள்? என்று ஒரு காலத்தில் இழிமொழி வீசிய மெத்தப்படித்தவர்கள் எல்லாம் இன்று அண்ணாவின் பெருமைகளையும் தகைமைகளையும் உணர்ந்து விட்டார்கள்!

அண்ணாதுரையா? ஆகாது; ஆகாது; அவன் நாஸ்திகனாச்சே, கடவுள் இல்லையென்று கூறுபவன் ஆச்சே; என்று எட்ட நின்று ஏளனம் செய்தவர்கள் எல்லாம், அண்ணா ஓர் பேரறிஞர் தான்; பெருமகன் தான்; என்று கூறுமளவுக்கு மனம் மாறியிருக்கிறார்கள்:

அண்ணாவைப் பார்த்து அன்று 'காட்டுமிராண்டி' என்றார் பண்டிதர் நேரு. இன்று அவரது மகள் இந்திராவோ 'அறிஞர் அண்ணா' என்று அழைத்து அண்ணாவின் திருப் புகழைப்பாடிப் பரவசமடைகிறார்!

இந்த மகோன்னத நிலையை அவரால் எப்படி அடைய முடிந்தது?

இதற்குப்பதில் அவர் ஓர் 'பிறவி மேதை' என்பதே!

மேதைகள் உருவாக்கப் படுவதில்லை; மேதைகள் மேதைகளாகவே பிறக்கிறார்கள் என்றார் ஓர் அறிஞர்.

அண்ணாவை பொறுத்த வரை அது நூற்றுக்கு நூறு உண்மையான வார்த்தை தான். அவர் சாதாரணக் குடும்பத்தில் பிறந்தாலும் ஓர் மேதையாகவே பிறந்தார்.

2000 ஆண்டுகளாகத் தமிழ்த்தாய் தவமிருந்தது தன் பயனாக அண்ணா அவதரித்தார்.

. ஆம், அண்ணாஓர் அவதார புருஷர்தான.

ஒரே சிந்தனையை யாவர்க்கும் ஏற்படுத்தவே அண்ணா அவதரித்தார்.

எந்தெந்த நோக்கங்களை நிறைவேற்ற அண்ணா அவதரித்தாரோ அந்தந்த நோக்கங்கள் நிறைவேறி விட்டனவா?

பூரணமாக நிறைவேறு விட்டாலும் ஓரளவு நிறைவேறித் தான் விட்டன: இன்னும் ஓர் பத்தாண்டு அண்ணா இவ்வுலகில் வாழ்ந்திருந்தாரென்றால், இன்று உலகத் தமிழர்கள் கண்டு வரும் கனவுகள் அத்தனையுமே நிறைவேறியிருக்கும்!

ஆனால் காலனுக்குத்தான் கண்ணும் இல்லை; கருத்தும் இல்லை; காதுமில்லையே!

சந்தர்ப்பம் தெரியாமலல்லவா அண்ணாவைப் பிரித்தெடுத்து கொண்டான் மாபாவி.

**— கோவை மகேசன்**

தூங்கிக்கிடந்த தமிழினத்தைத் தட்டியெழுப்பி இனவுணர்வுபாய்ச்சி, மீண்டும் பண்டைப் பெருமைகளுடன் வாழ்வோமென தமிழர்களை உறுதி பெறச் செய்யவே அண்ணா அவதரித்தார்.

சேரனும் சோழனும் பாண்டியனும் ஆண்ட திராவிட பூமியை மாற்றார் ஆட்சிபுரியும் அவல நிலை கண்டும் கொதித்தெழாது வெறும் சோற்றுப் பருக்கைகளாய்—சோம்பேறிகளாய் நாமமது தமிழரெனக் கொண்டு வாழ்ந்த தமிழினத்தாரை, தட்டியெழுப்பி "தமிழ்நாடு உனது நாடு; நீ அதன் சொந்தக் காரன் என்ற சுதந்திர உணர்வை யூட்டி விடுதலைப் பாதையில் அழைத்துச் செல்லவே அண்ணா அவதரித்தார்.

வள்ளுவன் வகுத்த குறள் நெறியையே வேதமாகக் கொண்டு வாழ்ந்த தமிழினம், வந்தேறு குடிகளின் பொய் புழுகு மூட்டைகளை நம்பி ஏமாந்து, தனது தனித் தன்மை வாய்ந்த பண்பாட்டையும், நாகரிகத்தையும் பறிகொடுத்து பகுத்தறிவை இழந்து சாதியெனும் சேற்றில் சிக்கி மூடக் கொள்கைகளினால் அலைப்புண்டு தவிப்பதிலிருந்து, அதை விடுவித்து மீண்டும் பகுத்தறிவுச் சுடரேற்றி வைக்கவே அண்ணா அவதரித்தார்.

மங்கி மறைந்து வந்த தமிழர் தம் கலைகளுக்கு மீண்டும் உயிர்கொடுக்கவும், உலகின் மூத்த இனமான தமிழர் தம் பெருமையை உலகறியச் செய்யவுமே அண்ணா அவதரித்தார்.

பல நாடுகளில் உரிமையிழந்து தவிக்கும் தமிழினத்தவரை பார்த்தால் ஒருங்கிணைத்து ஒரே குடிப்பை,

"விதியே விதியே தமிழச் சாதியை என் செயக் கருதியிருக்கின்றாய்?"

வாராது வந்த மாமணியாம் அண்ணாவை பேசாமல் கொள்ளாமல பிரித்தெடுத்துக் கொண்டாயே!

காலதேவா! நீ தமிழினத்துடன் செய்யும் குறும்புக்கு அளவேயில்லையா! உனக்கு, தமிழினம் அப்படி என்ன கேடு செய்து விட்டது? எதற்காகத் தமிழினத்தை இப்படிப் பழி வாங்குகிறாய்?

வானுலகில், அண்ணல் காந்தியும் கல்கியும், திரு.வி.க.வும், பாரதியும் பாரதிதாசனும் என். எஸ். கிருஷ்ணனும அமரர் வன்னியசிங்கமும அண்ணாவின் அடுக்கு மொழிச் சொற்பொழிவைக் கேட்க ஆசைப்பட்டுஉனக்கு 'சம்திங்' தந்திருப்பார்களோ?

இல்லாவிட்டால் அண்ணா உயிரின்மேல் உனக்கு ஏன் அத்தனை கொள்ளை ஆசை? அண்ணாவுக்கு பதிலாக தமது உயிரை உனக்கு காணிக்கையாக தருவதற்கு இலட்சக்கணக்கான தம்பிமார்கள் தயாராக இருக்கிறார்களே!

கொடுங்காலனே! உன்னால் எங்கள் அண்ணாவின் உடலையும்உயிரையும்தானே பிரிக்க முடிந்தது? எங்கள் உள்ளமெல்லாம் நிறைந்திருக்கும் அண்ணாவின் அழகுத்திருவுருவத்தை — குழந்தைத் தனமான அப் புன்சிரிப்பை— எளிமையான அத்தோற்றத்தை — தமிழே வடிவான அப்பேரறிஞரை எம்மிடமிருந்து உன்னால் பிரித்து விட முடியுமா?

முடியாது. உன்னால் மட்டுமல்ல; அகில உலகில் எந்தச் சக்தியாலும் அது முடியவே முடியாது!

(9-ம் பக்கம் பார்க்க)

# அண்ணு மறைவு செய்தி கேட்டு நிலை கலங்கினர் செல்வா!

## தமிழர்களுக்கு இது பேரிடியென அவரது வாய் முணு முணுத்தது!

## தமிழ் இலங்கை முழுவதும் தாங்கொணுத் துயரம்!

உலகெங்கும் வாழும் ஆறு கோடி திராவிட மக்களின் அன்புக்குரிய அண்ணனும் தென்னகத் தமிழர்களின் வழிகாட்டியும் அறிவுலக மாமேதையும் தமிழ் நாட்டின் முதலாவது முதலமைச்சரும் தமிழ்த்தாய் இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தவமிருந்து பெற்ற தன்னிகரற்ற புதல்வனுமாகிய பேரறிஞர் அண்ணுவின் இழப்புச் செய்தி கேட்டதும் தமிழ் இலங்கை முழுவதும் ஆற்ற முடியாத சோகத்திலாழ்ந்தது.

வடக்கு, கிழக்கிலும், மலைநாட்டிலும்' கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் வாழும் தமிழ் பேசும் மககள் அண்ணு மறைவு கேட்டு கதிகலங்கியுள்ளனர். உலகத் தமிழர்களுக்கு வழிகாட்டி வந்த ஒளிவிளக்கு அணைந்ததால் ஈழத் தமிழ் மக்களின் உள்ளமெலாம் இருண்டு கிடக்கிறது.

தமிழ்ப்பகுதி அனைத்தும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டு துக்கம் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழரசுக் கட்சித் தலைவர்கள் பலரும் தமிழ் மக்களும் அண்ணு மறைவு செய்தி கேட்டதும் கேவிக் கேவி அழுதனர்.

எதற்கும் நிலை கலங்காத தமிழரசுத் தந்தை திரு செல்வநாயகம் அவர்களைககூட தென்ஞட்டுக் காந்தியாம் அண்ணுவின் மரணச் செய்தி திடுக்கிட வைத்துவிட்டது. துக்கம் தொண்டையை அடைக்க மெல்லிய குரலில் அண்ணுவின் மரணம் இந்தியாவில் வாழும் தமிழர்களுக்கு மட்டுமின்றி இந்தியாவுக்கு வெளியே வாழும் தமிழர்களுக்கும் ஒரு பெரும் வீழ்ச்சியென்று குறிப்பிட்டார்.

**தமிழ் மக்களின் துயரத்தை ஆற்றுவாரில்லை. தேற்றுவாரில்லை. ஆற்றிஞலும் தேற்றிஞலும் தீரக்கூடிய துயரமா இது?**

**தமிழ்ப் பகுதிகளிலும் கொழும்பிலும் பல இரங்கற் கூட்டங்கள் நடைபெற்றுவருகின்றன. இக்கூட்டங்களுக்கு தமிழ் மக்கள் பெருமளவில் திரண்டு சென்று அண்ணுவுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.**

**தமிழரசுக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணத்தில் இம்மாதம்4ந் திகதி பிற்கபல் ஓர் அனுதாபக்கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்தில்சோகம் கட்பியமுகங்களுடன் அலையலையாக திரண்டு சென்று ஆயிரக்கணக்கான தமிழர்கள் பங்கு பற்றினர்.**

தமிழ்ப் பகுதியிலுள்ள இருபெரும் மாநகர சபைகளான யாழ் மாநகர சபையும் மட்டக்களப்பு மாநகர சபையும் அண்ணு மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன. இரு மாநகர சபைகளிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப் பட்டிருந்தன.

யாழ். குடா நாட்டில் கறுப்புக் கொடி தென்படாத இடமேயில்லை. எங்கும் துக்கச் சாயல் நிறைந்திருந்தது.

அறிஞர் அண்ணுவின் புத்தகம் தான் எனக்கு அரசியல் சிந்தனையைத் தூண்டியது, என்று திரு. அ. அமிர்தலிங்கம் யாழ். நகரில் நடந்த ஓர் இரங்கல். கூட்டத்தில் நாதழுதழுக்க கூறினர்.

சகல கட்சிப் பிரமுகர்களும் கலந்து கொண்ட இக் கூட்டத்திற்கு யாழ். மேயர் திரு. நாகராஜா தலைமை வகித்தார்.

அண்ணுவின் படங்களையும், கறுபபுக் கொடிகளையும் தாங்கிய மக்கள் நாலாதிசைகளிலுமிருந்து வந்து, யாழ். நகர மண்டபத்தின் உள்ளும் புறமும் நிறைந்து நின்றனர்.

தமிழரசுக் கட்சி சத்தியாக்கிரகம் நடாத்திய காலத்தில் தி. மு. க. காட்டிய பேராதரவு குறித்து தமிழரசுக் கட்சிப் பிரமுகர்கள் பாராட்டி பேசினூர்கள்.

பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் அண்ணுவின் இலட்சியங்களை எடுத்துரைத்தார். இக்கூட்டத்தில் அனுதாப தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணப் பகுதியின் பல பாகங்களிலும் அண்ணு நினைவு நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. பாசையூரில் திரு. அழகையா தலைமையில் ஒரு அனுதாபக் கூட்டம் இடம் பெற்றது.

அண்ணு மறைந்த செய்தி கேட்டு சோகக் கடலில் ஆழ்ந்த மட்டு நகர் வாசிகள் தங்கள் அனுதாபத்தை ஒரு முகமாக தெரிவிக்க மட்டு நகர் பாட்டாளிபுர மைதானத்தில் கூடினூர்கள். இக் கூட்டத்திக்கு திரு. இராசதுரை தலைமைதாங்கி பேசினூர்.

துக்கம் தொண்டையை அடைக்க மிகவும் சிரமப்பட்டு வார்த்தைகள் வெளிவர இராசதுரை சொன்னதாவது:—

தமிழ் அன்னை பூவிழந்து பொட்டிழந்து இருந்தகாலத்தில் அவளுக்கு கூந்தல் முடித்து பூவும் பொட்டும் இட்டு அரியாசனமேற்றிய பெருமை அறிஞர் அண்ணுவையே சாரும். அவரின் பிரிவு தமிழகத்துக்கு மட்டுமல்ல உலகத் தமிழ் இனத்துக்கே பெரும் இழப்பாகும்.

அண்ணு இலங்கை தமிழர்கள் மீது பெரும் அக்கறை கொண்டிருந்தார். இலங்கை தமிழர்களைப்பற்றி அவர் அடிக்கடி ஏக்கத்துடன் விசாரிப்பார் என்ருர் திரு. இராசதுரை.

தமிழரசுத்தலைவர் திரு. சா. ஜே. வே தமது அனுதாபச் செய்தியில் கூறிபதாவது:—

அண்ணு தமிழ் மக்களின் தலைவர். அவர் ஒரு கல்விமான். தென்ஞட்டுத் தமிழர்களை தமிழன் என்ற இன உணர்வோடு தட்டியெழுப்பிய வீரன். அவருடைய அகாலமரணத்தைக் குறித்து விசனப்படுகிறேம். இந்தியாவில் வாழும் தமிழர்களுக்கு மட்டுமன்றி இந்தியாவுக்கு வெளியே சிதறியிருக்கும் தமிழ் மக்கள் எல்லோருக்கும் அண்ணுவின் மறைவு ஒரு பெரும் வீழ்ச்சியாகும். அவருடைய மனைவியாருக்கும் குடும்பத்தினருக்கும் அவரது கட்சியைச் சேர்ந்த எல்லோருக்கும் இலங்கைத் தமிழர்கள் சார்பில் எனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் தமது அனுதாபச் செய்தியில் கூறியிருப்பதாவது:—

அறிஞர் அண்ணுவின் மறைவு என்றென்றும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். சென்ற பல நூற்றாண்டுகளில் தமிழ் மக்கள் காணுதமாபெரும் இழப்பாகும். கற்பனையிலும் எண்ண முடியாத இந்தப் பேரிழப்பால் எல்லோருமே இழத்தற்கரிய ஒரு பொருளை இழந்துவிட்டவர் போல ஏங்கித்துடித்து வாடுகின்ருர்கள். அண்ணு அவர்கள் ஓர் அரசியற் கட்சியின் தலைவரெனினும் அக் கட்சியைச் சேராத மக்களைப் போன்று துன்பமடைகின்றனர். தங்கள் தலைவரின் இன்ப துன்பங்களைத் தங்களின் இன்பதுன்பங்களாகக் கொள்ளத்தக்க முறையில் மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட

## அண்ணு மறைவுக்கு தமிழரசுத் தந்தை அனுப்பிய அனுதாபச் செய்தி



தமிழரசுத்தலைவர் திரு: சா. ஜே. வே. செல்வநாயகம் அண்ணு மறைவு குறித்து தற்காலிக தமிழக முதல்வர் நாவலர் இரா. நெடுஞ்செழியனுக்கு அனுப்பியுள்ள அனுதாபத் தந்தியின் வாசகம் வருமாறு:—

"அறிஞர் அண்ணுவின் மரணத்தால்ஆழ்ந்ததுக்கத்தில் இருக்கிறேன். உலகெங்குமுள்ள தமிழர்களுக்கு இது ஓர் பேரிழப்பு, அவரது மரணத்தால், தமிழ் இலங்கை துக்கம் அனுட்டிக்கிறது. அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரியப்படுத்துங்கள்"

### பொதுச்செயலாளர் 'அமிர்'

தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. அனுப்பியுள்ள தந்திச் செய்தியில் கூறப்பட்டிருப்பதாவது:-

"அண்ணுவின் மரணத்தால், உலகத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள ஈடு செய்ய முடியாத நஷ்டத்தைக் குறித்து இலங்கைத் தமிழ் மக்கள் தங்களது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிருர்கள். அண்ணுவின் குடும்பத்தினருக்கும், கட்சியினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம்;

### திருச்செல்வம்

திரு. மு. திருச்செல்வம் அனுப்பியுள்ள செய்தியில் பின்வரும் வாசகங்கள் இடம் பெற்றுள்ளன.

"20ம் நூற்ருண்டின் தலைசிறந்த தமிழர் ஒருவரின் மறைவை முன்னிட்டு இலங்கைத்தமிழர்கள் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளனர்; தமிழ் மக்களின் சுயமரியாதையை மீண்டு நிலைநாட்டியதுடன் தமிழ் மொழிக்கு அவர் புத்துணர்ச்சி அளித்துள்ளார். தமிழ் மக்களின் நீண்டகால வரலாற்றில் இவரது தலைமையிலுள்ளகாலம் சிறந்த யுகத்தின் ஆரம்பமென நினைவு கொள்ளப்படும்"

### யாழ் மேயர்

யாழ். மேயர் திரு. நாகராசா அனுப்பியுள்ள அனுதாபத் தந்தியில் தெரிவித்ததாவது—

"யாழ் நகர மக்களினதும் மாநகரசபையினதும் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்! உன்னத இலட்சிய புருஷனை இழந்தது பற்றி மிக்க கவலையை நாம் அடைந்துள்ளோம்! அண்ணு மூலம் தமிழகம் பெற்ற வெற்றிகள் அவரது நினைவுச் சின்னமாக என்றும் விளங்கும்!"

### இராசதுரை

திரு. செ. இராசதுரை திருமதி அண்ணுவுக்கு அனுப்பியுள்ள அனுதாபத்தந்தியில் "தங்கள் அன்புருவான வாழ்க்கைத் துணைவரை இழந்து விட்டீர்கள். இத்தலைமுறைகாணுத தலைவரை தமிழர்கள் இழந்து விட்டனர்" என்றும், இரா. நெடுஞ்செழியனுக்கு அனுப்பியுள்ள செய்தியில் 'அண்ணு இல்லாத தமிழகம் பாலைவனமாகும், அண்ணு வழி நடந்து தமிழர்களை ஈடேற்றுங்கள்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# யானை மார்க் சிவப்பு, கறுப்பு போத்தல் மூடிப் போட்டி

இரண்டாங் கட்டம்



## பரிசுகளாக ரூ. 75,000/- க்கும் மேற்பட்ட தொகை.

1ஆம் பரிசு ரூ. 1,500/- 2ஆம் பரிசு ரூ. 1,000/-

3ஆம் பரிசு ரூ. 750/- 4ஆம் பரிசு ரூ. 500/-

5ஆம் பரிசு ரூ. 350/- 6 முதல் 250 ஆவது வரை தலா ரூ. 200/-.



மற்றும் 50 (ஐம்பது) பரிசுகள் ரூ. 200/- பெறுமதியான விளையாட்டு உபகரணங்களுக்குரிய உறுதிச் சீட்டுகள் பாடசாலைகளுக்கு!



தலா ரூ. 50/- கொண்ட 250 விற்பனையாளர் பரிசுகள்

### விதிகள்

1. பிரவேசப்பத்திரத்தில் "எலிபன்ட் ஹவுஸ்" பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களைக் கவனமாகப் படித்த பின்னர் அதிற் காணப்படும் 14 வகை யானை மார்க் குளிர் பானுதிகளினதும் பெயரின் கீழ் கோடிடவும்.
2. இந்தப் பெயர்களைக் கீழே காணப்படும் குறுக்கெழுத்துப் போட்டிப் பத்திரம் போன்ற சதுரக் கூடுகள் இரண்டிலும் நேர் வரிசைக் கிரமமாக நிரப்பவும். பெயர்களுக்குத் துணையாகஅக்கூடுகளில் அச்சிடப்பட்டிருக்கும் எழுத்துக்களைப் பயன்படுத்தவும்.
3. இனி கீழ்க் கண்டவாறு, ஒவ்வொரு கூட்டிலுமுள்ள எல்லா எழுத்துக்களுக்கும் பொருந்தக் கூடியதாக யானை மார்க் போத்தல் மூடிகளைச் சேகரிக்கவும்.



கறுப்புப் பந்திக்கு: நீங்கள் நிரப்பும் எழுத்துக்களுடன் இணையக்கூடிய கறுப்பு எழுத்துக்கொண்ட மூடிகளையும் அச்சிடப்பட்டிருக்கும் எழுத்துக்களுடன் இணையக் கூடிய சிவப்பு எழுத்துக் கொண்ட மூடிகளையும் சேகரிக்கவும்.

சிவப்புப் பந்திக்கு: மேற்சொன்னதற்கு எதிர்மாருகச் சேகரிக்கவும். அதாவது, நீங்கள் நிரப்பும் எழுத்துக்களுக்கு சிவப்பு எழுத்துமூடிகளையும் அச்சிடப்பட்ட எழுத்துக்களுக்கு கறுப்பு எழுத்து மூடிகளையும் சேகரிக்கவும்.

குறிப்பு: எழுத்து எதும் அற்ற மூடிகளை அல்லது "எலிபன்ட் பிரான்ட்" என்ற வாசகமுள்ள மூடிகளைப் புறக்கணிக்கவும்.

4. இவ்வாருக 124 சிவப்பு எழுத்து மூடிகளையும் 124 கறுப்பு எழுத்து மூடிகளையும் சேகரித்த பின்னர், பூர்த்தியாக்கப்பட்ட பிரவேசப் பத்திரத்துடன் (சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்) எலிபன்ட் ஹவுஸ் விற்பனை/விளம்பர முகாமையாளரிடம் அவற்றைக் கொண்டு வந்து கொடுக்கவும். முதலாவது கையளிக்கப்படும் முற்றும் சரியான பிரவேசத்துக்கு முதற் பரிசு கிடைக்கும். இப்படியே 250 பரிசுகளும் முடியும் வரை நடைபெறும். தபாலில் அனுப்பப்படும் பிரவேசப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

பாடசாலைகளுக்குரிய பரிசுகள்: 18 வயதுக்குட்பட்ட மாணவப் போட்டியாளரில் பரிசு பெறும் முதல் 50 பேரும் டயஸ் தாபனத்தில் கொடுத்து ரூ. 200/-க்கு தமது பாடசாலைக்கு விளையாட்டு உபகரணங்கள் பெறக் கூடிய வவுச்சர்களையும்பெறுவர். இந்த வவுச்சர்கள் அவரவர் பாடசாலைகளின் பேரில் வழங்கப்படும். பாடசாலை அதிபரிடமிருந்து போட்டியில் பரிசு பெறும் மாணவரின் வயது சரியென அத்தாட்சிப்படுத்தும் கடிதமொன்றனைப் பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

---------- பிரவேசப்பத்திரம் ---------- இங்கே வெட்டுக ----------

### கட்டுரை — எலிபன்ட் ஹவுஸ் பற்றிய உண்மைகள்

75 வருடம் நிரம்பப்பெற்ற கம்பனியாகிய சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்டின் தலைமைக் காரியாலயமே எலிபன்ட் ஹவுஸ். இக் கம்பனிக்கு கண்டியிலும் திருகோணமலையிலும் கிளைகள் உண்டு. பவுண்டன் கபே இக் கம்பனிக்குச் சொந்தமானது. தெல்தெனியா, விக்டோரியா எஸ்டேட்டில் அமைந்திருக்கும் இலங்கையின் மிகப் பெரிய தனியார் துறை கால்நடைப்பண்ணையும் இக் கம்பனிக்குச் சொந்தமானது. யானை மார்க் குளிர் பானங்கள் யாவும் உயரிய தரச் சிறப்புக்கும் சுத்தத்திற்கும் பெயர் பெற்றவை. இவற்றில் ஒரேஞ் பார்ளி வெகு பிரசித்தமானது. கம்பனியின் தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் இலங்கையிலுள்ள மிகப் பெரியதும் மிகச் சிறந்ததுமாகும். ஆகவே அதன் சோடா (Soda) அதி சிறந்ததெனப் பாராட்டப்படுதல் இயல்பே. லெமனேட் (Lemonade) போன்ற யானை மார்க் குளிர் பானங்கள் எப்பொழுதும் பெரிய போத்தல்களில் வழங்கப்படுகின்றன. எனவே சிக்கனமான குடும்பப் பெண்கள் இவற்றைப் பெரிதும் விரும்புகிருர்கள். இதற்கிடையில் ஒரு விஷயம்; லெமனேட் இப்பொழுது கூடுதல் இனிப்புச் சுவையுடன் வருகிறது. குடும்பப் பெண்கள் இப்பொழுது பேயாவ (Peyawa) வையும் வீட்டில் கையிருப்பில் வைத்திருக்க முற்பட்டுள்ளார்கள். ஏனென்ருல், சுகாதார முறைப்படி தயாரிக்கப்படும் இந்தக் குளிர்பானம், தடிமல், இருமல், தலையிடி, தேக உளைச்சல், காய்ச்சல் ஆகியவற்றைக் கண்டிக்கக் கூடிய ஔடதங்களை உள்ளடக்கியதாகும்.

போத்தலில் பால் அடைக்கும் மிகப்பெரிய இயந்திரம் எலிபன்ட் ஹவுஸில் உண்டு. உயர் ரக பழச் சாறுகள், பழரசங்களையும் எலிபன்ட் ஹவுஸ் தயாரிக்கிறது. இப் பழ ரசங்களில் ஒரேஞ் (Orange), பிளாக் கரன்ட் (Black Current), லெமன் (Lemon), கிரேப் புருட் (Grape Fruit) பஷோஞ (Passiona) ஆகியனவும் லங்கா லைம் (Lanka Lime), லைம் ஜூஸ் அன்ட் சோடா (Lime Juice & Soda) முதலியன தயாரிக்கப் பயன்படும் எலுமிச்சை சாறும் அடங்கும். எலிபன்ட் ஹவுஸ் இருபதுக்கு மதிக வகை, சுவையான ஐஸ் கிறீம்களைத் தயாரிக்கிறது. இவை வெகு துப்புரவானவை, போஷாக்கு சிறந்தவை எனப் பெயர் பெற்றுள்ளன. பத்து சத ஐஸ் பழம் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தொன்ருகும். எலிபன்ட் ஹவுஸின் மற்றுமொரு புதிய தயாரிப்பு தேன் சுவைக் கோல்டன் சிரப் (Golden Syrup) ஆகும். பிற ருசிகளில் நாட்டமுள்ள வயதானவர்கள் தமது பானங்களுடன் கலப்பதற்கு யானை மார்க் டொனிக் (Tonic), ட்ரை ஜிஞ்ஜர் ஏல் ஆகியவற்றையே குறிப்பிட்டுக் கேட்கிருர்கள். பெண்களுக்கு மிகவும் பிடித்தமான பானம் பிற்றர் லெமன் (Bitter Lemon); மற்ருென்று புதிய, சீனிக் கலப்பற்ற ஸ்லிம் லைம் (Slim Lime).

குடும்பத்தின் உணவு சேமிப்பு அறைக்கென பல்வேறு சொசேஜ் ரகங்களை எலிபன்ட் ஹவுஸ் தயாரித்தளிக்கிறது; (போர்க், பீவ், மீன் முதலியன). சிப்பொலடாஸ், போக்கீஸ், டெவில்ட் பீவர்ஸ் மற்றும் புதிய ஸ்பைஸ்ட் லிங்குஸ் இப்படிப் பல. இரண்டு ரகமான பாக் அன்ட் ஸ்ட்ரீக்கி பேக்கன், ஸ்மோக்ட் ஹாம், சமைத்த ஹாம் இவற்றுடன் சலாமி, மதிய போசனத்துக்குரிய இறைச்சி, சான்ட்விச்சில் தடவி மகிழ்ச்சியோடு உண்ணக் கூடிய லிவர் பேற்றே போன்ற சமைத்த பண்டங்களையும் தயாரிக்கிறது.

எலிபன்ட் ஹவுஸுக்கு விஜயஞ் செய்வோர் இலங்கையின் மிகப்பெரிய ஐஸ் தொழிற்சாலையையும் கார்பன் டை ஒக்ஸைட் தொழிற்சாலையையும் காணலாம். பாடசாலை மாணவருக்கு எலிபன்ட் ஹவுஸுக்கு விஜயஞ் செய்தல் மகிழ்ச்சியும் அறிவும் ஊட்டக்கூடிய தொன்ருகும். அவர்களின் அபிமானத்துக்குரிய கடுஞ் சிவப்பு நெக்டோ (Necto) அல்லது நுரைத்தெழும் கிறீம் சோடா (Cream Soda) பானத்துடன் அவர்களுடைய விஜயம் முற்றுப்பெறும்.

நத்தார்க் காலத்தில், எலிபன்ட் ஹவுஸ், நத்தார் கேக், சொக்கிளேற் யூல் லொக் மற்றும் அவர்களது அதி விசேஷ நத்தார் புடிங், மின்ஸ் பைஸ் ஆகியவற்ருேடு வழக்கமான சொக்கிளேற், டன்டி, மடெரா, லவ், பட்டர், வெடிங் கேக் ஆகியவற்றையும் தயாரிக்கின்றனர்.

இராப்போசன விருந்துகள், டான்சுகள், கொக்டெயில் பார்டிகள் சிறுவர் விருந்து வைபவங்கள், திருமண வைபவங்கள், கிறிக்கெற் போட்டிகள் முதலியவற்றுக்கு முதற்தர விருந்து உபசரணைச் சேவை தேவைப்படும் போதெல்லாம் மக்கள் எலிபன்ட் ஹவுஸ் சேவையையே நாடுகின்றனர். இந்த வைபவங்களில் லங்கா ஒரேஞ் (Lanka Orange), ஜிஞ்ஜர் பியர் (Ginger Beer) ஆகியவற்றுக்கு மிகுந்த கிராக்கி உண்டு. கொழும்பின் குடும்ப உணவுச்சாலையாகிய பவுண்டன் கபேயிலும் விருந்து உணவு உபசரணை ஒரு தனிக் கலையாக மேற்கொள்ளப்படுகிறது. இந்த உணவுச்சாலையில் (2 பெரியவர்கள் 2 சிறுவர்கள்) நால்வர் அடங்கிய குடும்பத்துக்கு போயா தினங்களில் ரூ. 12/-க்கு மதிய உணவு வழங்கப்படுகிறது.

கறுப்புப் பந்தி

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | D | | ■ | ■ | | | | | J | | | | | | | | | |
| | | | T | | ■ | ■ | ■ | | | | | | | | E | | | | |
| | E | | | | | ■ | ■ | ■ | | | | K | | | | | | | |
| | | | | | A | | | ■ | ■ | | | | G | | | | | | |
| | | | | A | | | | | ■ | ■ | | | | | | | O | | |
| | | T | | | | | | | | | ■ | | | I | | | | | |
| | | | | G | | | | | | | | ■ | ■ | ■ | | O | | | |

சிவப்புப் பந்தி

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | | | | | | | | | | | | ■ | | | C | | |
| | | | | | | B | | | | | | ■ | ■ | | | Y | | | |
| | | N | | | | | | | | ■ | ■ | | | | | | | D | |
| | | | | | S | | | | ■ | ■ | | | | | | L | | | |
| | L | | | | | | | ■ | | | | | | | | | M | | |
| | | N | | | ■ | ■ | ■ | ■ | | | | | | | R | | | | |
| | | D | | ■ | ■ | ■ | ■ | | | | | | | | | R | | | |

இந்தப் போட்டியில் சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், அதன் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள், கிரான்ட் அட்வேர்டைசிங் (இலங்கை) லிமிட்டெட், யூனிவேர்சல் பெற்றல் கிரவுன் கோர்க் கம்பனி ஆகியவற்றைச் சேர்ந்த ஊழியரோ அவர்களின் குடும்பத்தவர்களோ பங்குபற்றலாகாது.

இந்தப் போட்டியின் முடிவுகள் பற்றி எவ்வித கடிதத் தொடர்பும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. (சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்) எலிபன்ட் ஹவுஸ் நிர்வாகிகளின் தீர்ப்பே முடிவானது.

போட்டியாளர் பெயர்
....................................................
விலாசம்
....................................................
18 வயதுக்குட்பட்டவராயின்
(அ) வயது
(ஆ) பாடசாலை
....................................................

யானை மார்க் குளிர் பானங்களைக் கிரமமாக உங்களுக்கு விற்பவர்
பெயர் ....................................................
அவருடைய கடை, கிளப், சினிமா மதுச்சாலை, வாடி வீடு, கன்டீன் அல்லது அத்தகைய விற்பனை முனை அல்லது வியாபாரியின் விலாசம் —
....................................................

விற்பனையாளருக்குரிய தலா ரூ. 50/- கொண்ட 250 பரிசுகள் பரிசிலனையின் பின்னர் வழங்கப்படும்.

எலிபன்ட் ஹவுஸ்
சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்
கொழும்பு — கண்டி — திருகோணமலை.

---------- இங்கே வெட்டுக ----------

# சீறிய சிங்கள ஆட்சிக்கு

# அண்ணா விடுத்த எச்சரிக்கை!

பேரறிஞர் அண்ணா அவர்கள் இலங்கைத் தமிழர்களிடம் அன்பும் பற்றும நிறையப் பெற்றவர். சிங்கள ஆட்சியை எதிர்த்து தமிழர்கள் போராட்டம் நடத்திய போதெல்லாம் தமிழ் நாட்டிலிருந்து கொண்டே அப் போராட்டங்களுக்கு ஆத்மீகப்பலத்தை அளித்தவர். தமிழர்களின் உரிமைகளைப் பறித்து அவர்களைக் கொடுமைப்படுத்த சிங்கள ஆட்சி முனைந்த போதெல்லாம் கண்டனக் குரல் எழுப்பியவர்கள்:

1961 ம் ஆண்டு இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் சிங்கள மொழித் திணிப்பை எதிர்த்து தமிழ்ப் பகுதிகளில் இருமாதங்கள் தொடர்ந்து மாபெரும் உரிமைப் போரைதமிழரசுக்கட்சியின் தலைமையில் நடத்தியது தெரிந்ததே. அப்போராட்டத்தின் போது, தமிழ் நாட்டிலும், மூலை முடுக்கெல்லாம் சிங்கள ஆட்சியின் கொடுமைகளை எதிர்த்து கண்டனக் கூட்டங்களை நடத்தியது தி மு. கழகம்.

போராட்டத்தின் ஒரு கட்டத்தில் போராட்டம் உடனே நிறுத்தப படாவிடின் கடும நடவடிக்கை எடுக்கப் போவதாக அன்றய பிரதமர் திருமதி சிறிமா கூறியிருந்தார். இக்கூற்று அண்ணாவை கொதித்தெழச் செய்தது.

சென்னை வண்ணரைப் பேட்டையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய அண்ணா, சிறிமாவுக்கு சுடச்சுடப்பதிலளித்தார். இலங்கைப் பிரதமரே, கடைசி நடவடிக்கையெடுப்பேன் என்று இலங்கைத் தமிழர்களை எச்சரித்திருக்கிறீர்களே என்ன உமது கடைசி நடவடிக்கை என்று சிறிமாவைத் தட்டிக் கேட்டார் அண்ணா.

இன்று சிங்கள ஆட்சியை இப்படித் தட்டிக்கேட்பதற்கு அண்ணா இல்லையே என்று கலங்குகிறார்கள் ஈழத்தமிழர்கள்.

அறிஞர் அண்ணா சென்னை வண்ணாரப்பேட்டையிலுள்ள கலைஞர் மு. கருணாநிதி படிப்பகத்தின் ஆண்டு விழாவில் பேசும் போது குறிப்பிட்டதாவது:—

"சிங்களத்தில் வாழும் தமிழர்கள் இன்று சொல்லொணாத் துயரில், தாங்க முடியாத இன்னலில், ஆட்சியாளரின் அளவிட முடியாத கொடுமையில் ஆழ்ந்து தவிக்கிறார்கள்.

"நாம் அவர்களுக்கு ஆதரவு தர, நமது அன்பையும் அனுதாபத்தையும் தெரிவிக்க சில தினங்களுக்கு முன் கடற்கரையில் கூடினோம். 'இலங்கைத் தமிழர்களே, அஞ்சாதீர்கள், உங்கள் அறப்போருக்கு தென்னகத்திலிருக்கும் திராவிடர்கள் ஆதரவும் அன்பும் காட்டுகிறார்கள் உங்கள் போராட்டம் வெல்ல மனப்பூர்வமான ஆதரவைத் தருகிறோம்' என்று தீர்மானம் செய்தோம்,

"இன்று இலங்கைக் கடற்கரை பகுதியிலும், கடற்கரை ஓரங்களிலும் கப்பற் படைகளும், பீரங்கிகளும், இராணுவமும் நிறுத்தி காவல் புரிகிறார்களாம்! கடற்கரையில் முழங்கிய முழக்கம் சிங்கள ஆட்சியாளரை அதிரச் செய்திருக்கிறது!

"சிங்கள அரசாங்கம்பீரங்கிப் படைகளைக் காவலில் வைத்தாலும் சரி, கப்பற் படைகளைக் காவலில் வைத்தாலும் சரி, அல்லது பிரிட்டனிலிருந்து, பெரும்பெரும் படைகளைக் கொண்டு வந்தாலும் சரி நாம் அதைப் பற்றி கவலைகொள்ளவில்லை!

### கண்டனம்

'ஆனால் இலங்கை அரசினர் செய்யும் கொடுமைகளை, நேர்மையற்ற செயல்களைக் கண்டிக்கிறோம்.

'இலங்கையில் வாழும் தமிழர்களின் நீதியான—நேர்மையான கோரிக்கைகளுக்கு வழி காண வேண்டும். அவர்களின் தலைவர்களை அழைத்து இலங்கை ஆட்சியாளர்கள் பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

'தலைமை அமைச்சர் திருமதி பண்டாரநாயகா சமீபத்தில் பேசிய பேச்சுக்கள் மிக செருக்கு வாய்ந்தவைகளாகவும், இறுமாப்பு கொண்டவைகளாகவும் தொனிக்கின்றன!

"தமிழர்களைப் பயமுறுத்திப் பேசுகிறார். தமிழர்கள் ஒரு முடிவுக்கு வராவிட்டால் கடைசி நடவடிக்கை எடுப்பேன்' என்று மிக ஆணவமாகவும், அகங்காரமாகவும் பேசி இருக்கிறார்.

'நான்கேட்கிறேன் 'இலங்கைப் பிரதமரே, என்ன கடைசி நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்?'

'அங்குள்ள தமிழர்களைப் பிணமாக்கப் போகிறீர்களா?

"அவர்களின் உயிர்களைச் சித்திரவதை செய்யப்போகிறீர்களா? என்ன கடைசி நடவடிக்கை?

"உங்களிடம் சுடுவதற்கு துப்பாக்கிகள் இருந்தால் எங்கள் தமிழர்களிடம் அதைத் தந்துதவுவதற்கு மார்பு இருக்கிறது. உரிமைக்காகப் போராடும் பல்லாயிரக்கணக்கான தமிழர்களை கொடுமைப்படுத்தி அடக்க சிறைகள் வைத்திருந்தால் அந்தச் சிறையில் வாடி வதங்கி உரிமைக்காக வீரமரணத்தைப் பெற எங்கள் தமிழர்கள் தயாராக இருக்கிறார்கள்.

"இதனால் தமிழர்களின் உரிமைக்குரல் அடங்கிவிடாது. ஆனால் உங்களது நாகரிகமற்ற செயலை—உங்கள் ஜனநாயகமற்ற போக்கை உலகமே கண்டு சிரிக்கும். உலக நாடுகள் எல்லாம் எள்ளி நகையாடும்'

# அண்ணா வாழ்க!

—சிற்பி—

அண்ணா என்றும் வாழ்க—எங்கள்
அண்ணா என்றும் வாழ்க.

அன்பு என்ற வழியில் நின்று
அறிவு என்ற ஒளியுமிழ்ந்து
அகில உலகத் தமிழர்க் கெல்லாம்
'அண்ணா'வாகி உயர்ந்து நின்ற

அண்ணா என்றும் வாழ்க—அறிஞர்
அண்ணா என்றும் வாழ்க

தமிழன் வாழ்வு தழைத்திடப் பொங்கத்
தனது வாழ்வைத் தியாகம் செய்து
தமிழினத்தின் அரசனாகத்
தரணி போற்றக் கொலுவிருந்த

அண்ணா என்றும் வாழ்க—தலைவர்
அண்ணா என்றும் வாழ்க


கடமையோடு கண்ணியத்தைக்
கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்துப்
படை நடத்திச் சென்று வீர
பாரதத் 'தமிழ் நாடு' கொண்ட

அண்ணா என்றும் வாழ்க—முதல்வர்
அண்ணா என்றும் வாழ்க

அமைதி ஆண்மை அடக்கம் பண்பு
ஆனமான அன்பு கொண்டு
அறிஞராகிப் புகழ் பெற்றுநின்று
அமரராகி நிறைவு பெற்ற

அண்ணா என்றும் வாழ்க--அமரர்
அண்ணா என்றும் வாழ்க!

# அண்ணாவும் அண்ணியும்



வள்ளுவர் காட்டிய வழியில் "வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகி" விட்ட பேரறிஞர் அண்ணா அவரது அன்புத் துணைவி இராணியுடன் இங்கு அமர்ந்திருக்கும் சிறப்புத்தான் என்னே!

# அண்ணா தம்பிக்கு எழுதிய இறுதிக் கடிதம்

அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாடு இதழிலும், 'காஞ்சி' 'ஹோம் லண்ட்' இதழ்களிலும் எழுதி வந்த 'தம்பிக்கு கடிதம்' ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொன்னேவியங்கள்— அரசியல் விளக்கங்கள்—இலக்கியப் படைப்புக்கள்.

தம்பி தம்பி என்று அவர் கனிவுடன் அழைத்து எழுதும் அக்கடிதங்களை படித்து படித்து இன்புற்ற தமிழ் மக்கள் இலட்சக் கணக்கில் இருக்கிறார்கள். ஒவ்வொரு பொங்கல் இதழிலும் அண்ணா சிறப்புடன் படைக்கும் கருத்துப் பொங்கலை உண்டு உண்டு மயங்கிக் கிறங்குவார்கள் அவரது தம்பியர்களும் மற்றவர்களும்.

அவர் தமிழுலகைத் தவிக்கவிட்டுப் பிரிந்து செல்லுவதற்கு முன் கடைசியாக கடும் சுகவீனத்தின் மத்தியிலும் கடந்த பொங்கலன்று கூட தம்பிக்கு கடிதமெழுதத் தவறவில்லை.

அவரது அந்த இறுதிப்படைப்பிலிருந்து சில பகுதிகளை இங்கே தருகிறோம்.

அடுத்த பொங்கலன்று தம்பிக்கு கடிதம் எழுத அண்ணா இன்றுநம்மிடமில்லையே!

"வரலாற்றுப் புகழ் படைத்ததும் பொருத்தமானதுமான தமிழ்நாடு எனும் பெயர் நமதுமாநிலத்திற்கு வரும் வகையில் இந்திய அரசியல் சட்டத்திருத்தம் செய்ததும் தி.மு. கழக சாதனைகளில் ஒன்று!

'பெயர் மாற்றமா? அடடாவோ! இன்னும் அந்த குறுகிய நினைப்பிலிருந்து இவர்கள் விடுபடவில்லையோ?' என்று சிலர் கேட்கிறார்கள்.

தம்பி—அந்த சிலர் தான் இந்தியாவை பாரத் எனவும் பார்லிமெண்டை லோக சபா எனவும், கவுன்சில் ஆப்ஸ்டேட்டை ராஜ்யசபா எனவும், பிரசிடெண்டை ராஷ்டிரபதி எனவும் இன்னும் பலவற்றை பெயர் மாற்றம் செய்தவர்கள்,

ஆனால் இப்போது அவர்கள் மக்களைத் திசைதிருப்பும்கலையில் தேர்ந்திருக்கிறார்கள்.

பொது மக்களின் நினைவாற்றல் — குறுகிய து — வழுக்கிச் செல்வது என்று நினைத்துள்ளார்கள்.

அதனால்தான் பொருத்தமற்ற வாதத்தில் துணிவோடிருக்கிறார்கள்.

மாபெரும் கேள்வியாக— பிரச்சினைகளின் சுருக்கமாக 'சோறு கிடைக்குமா — இதனால்?' என்று கேட்கிறார்கள்.

இந்தப் பெயர் மாற்றம் ஒரு கவளம் சோற்றையாவது மக்களுக்குத் தந்து விடுமா?— என்று கேட்கிறார்கள்.

பசித்த மக்கள் இந்த சோற்று வாதத்தால் ஈர்க்கப்பட்டு விடுவார்கள் என்று அவர்கள் நினைக்கிறார்கள்— தவறுக!

நான் நீண்ட நாட்களுக்கு முன் 'சோற்றால் மட்டுமல்ல' என்ற ஒரு கவிதைக் குறிப்பைப் படித்தேன். தருகிறேன் - உனக்கு- அவர்களுக்கல்ல! ஏனெனில் பதவிப் பெரு விருந்து தவிர வேறெதுவும் அவர்களைத் திருப்திப் படுத்தாது என்பதால்!

வெறும் சோற்றுப்பருக்கைகளினால் மட்டுமா மனிதன் வாழ்கிறான்? அல்ல! அல்ல!

அழகினால்- அமைதியால்- உண்மையால்- நல்லதன்மையால்- உழைப்பினால்- களிப்பினால் பிரிவால்-பாசத்தால் பேரார்வத்தால் வழிபாட்டால் அவன் வாழ்கிறான்.

வெறும் சோற்றுப்பருக்கைகளினால் மட்டும் மனிதன் வாழ்ந்துவிடுவதில்லை'

வெண்முகிலும் விண்மீனும் வழங்கும் இரவின் எழிற்காட்சிகளால் ஞாயிறு எழும்போது காட்சியளிக்கும் வானமண்டலத்தின் தோற்றத்தால்; மாலைப் பொழுதின் வண்ணக்கலவைகளால் பூத்துக் குலுங்கும் மரங்கள் பரப்பிடும் இனிமையால்- மாமலைகளின் கம்பீரத்தால்- அவன் வாழ்கிறான்.

வெறும் சோற்றுப்பருக்கைகளினாலா மனிதன் வாழ்கிறான்?

அலைபாயும் கடல்-அமைதி ததும்பும் ஏரிப்பரப்பில் பொழியும்குளிர்நிலவு-வெள்ளியை உருக்கி வார்த்தாற் போல மலையிலிருந்து விழும் அருவி—விதவிதமான பனிப்படலங்கள் கலைவாணர் உருவாக்கும்கவின்மிகும் படைப்புகள்—இவற்றாலும் மனிதன் வாழ்கிறான்.

வெறும் சோற்றுப் பருக்கையினால் மட்டுமா மனிதன் வாழ்கிறான்?

புள்ளினம் மிழற்றும் இன்னிசை-மரங்களைத் தழுவிச் செல்லும் தென்றல் எழுப்பும் 'சில்' என்ற ஓசை, யாழின் நரம்புகள் எழுப்பும் நாதம்.- ஆலயத்தின் மெழுகுவர்த்திகள் பரப்பும் மங்கிய ஒளி,

மலர்ந்த ரோஜா மலர்கள் - பழுத்த ஆரஞ்சுப் பழங்கள் பரப்பும்நறுமணம்- அறுவடை செய்யப்பட்ட வைக்கோலின் இதமான மணம் - ஆதரவுள்ள நண்பனின் கைலாகு-அன்னையின் கருணைமிகு முத்தங்கள்,

கவிஞனின் எழிற் கவிதைகள் - முனிவர்களின் அறிவாற்றல் - ஞானியரின் புனிதத் தன்மை - மேலோரின் சரிதங்கள் - இவற்றால் மனிதன் வாழ்கிறான்.

தோழமைகளால் - பெரும் சாதனைகளால் - இடைவிடாத கேள்விகளால்- கண்டுபிடிப்புக்களால்- தொண்டால் - பிறர் துயரில் பங்கு கொள்வதால் - நேசிப்பதால் - நேசிக்கப்படுவதால் மனிதன் வாழ்கிறான்.

ஈடுபாடுமிக்க வழிபாடுகளால் - புனிதமான ஆணைகளின் வழிபிறழாது நடப்பதால் - இங்கும் அங்கும் இறைவனின் அன்புக் கட்டளைகளை உணர்வதால் அவற்றின்படி ஒழுகுவதால் மனிதன் வாழ்கிறான்.

தொடர்ந்து பதவி தேடி வேட்டையாடும் இயல்பு கொண்டோருக்கு இந்தநன்மொழிகள் எந்தவிதமான பொருளையும் புகட்டாது.

ஆனால், தம்பீ - நல்லனவற்றை நீ விழைவாய் என்பதால் இந்த மேற்கோளை விரிவாக எடுத்துரைத்தேன்.

சோற்றால் மட்டும் மனித இனம் முன்னேறுவதில்லை.

இவைகளுக்கெல்லாம் சோறு ஆதாரமாயிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் மிருக உணர்வு தீர்க்கப்படும் போதுதான் மனிதன் எண்ணத்திலும் - இலட்சியத்திலும் உயர்நிலையை எட்டிப்பிடிக்க ஆசைப்படுகிறான்.

(11-ம் பக்க தொடர்)

ஆடம்பரமான முறையில் செட்டிநாட்டிலும், அண்ணாமலை நகரிலும், அந்த விழாவினைக் கொண்டாடினர். அறுபதாம் ஆண்டு என்பதற்காக, அறுபது வீடுகள், அறுபது பசுக்கள், இப்படி வாழ்க்கைக்குத் தேவையான சாமான்கள் அறுபது அறுபதாக தானம் கொடுக்கப் பட்டன.

அவரது போக்கினைக் கண்டித்து விடுதலையில் தலையங்கம் தீட்டுவது என எண்ணி பெரியார் அவர்களிடமும் அது பற்றிக் கூறினார் அண்ணா.

இலட்சம் இலட்சமாகச் செலவிடும் செட்டியார் விடுதலை வளர்ச்சிக்கு எதுவும் அனுப்பவில்லையே என்ற ஆத்திரம் பெரியாருக்கு உண்டு. ஆகவே, எழுதுங்கள் என்று கூறிவிட்டார்கள். அண்ணா காரசாரமாகத் தலையங்கம் எழுதினார். அச்சும் கோக்கப்பட்டு, அச்சிடப் படுவதற்காக, இயந்திரத்திலும் ஏற்றப்பட்டு விட்டது.

அந்த நேரத்தில், அண்ணாமலை செட்டியாரிடமிருந்து. ரூ. 1000-க்கு ஒரு செக், விடுதலை காரியாலயத்திற்குவந்தது, அறுபதாம் ஆண்டு நிறைவு நினைவாக. பெரியார் அந்தச் செக்கைக் கண்டதும், அண்ணாவை அழைத்து, செட்டியாரைப் பாராட்டி எழுதுங்கள் என்றார். "முடியாது. கொள்கைதான் பெரிது" என்று அண்ணா மறுத்தார்கள், அஞ்சாமையுடன். பெரியாரே தலையங்கம் எழுதி தனது பெயரால் வெளியிட்டார். கொள்கைக்காக அஞ்சாமை அன்றே உண்டு அண்ணாவிடம்.

ஃ ஃ ஃ

1937-ம் ஆண்டு ராஜாஜி அமைச்சரவை இந்தியைத் திணிக்க முயன்றபோது, அண்ணா அதை முழுமூச்சாக எதிர்த்தார்.

அண்ணா முழு முயற்சியால், தமிழகத்தில் இந்திக்குப் பயங்கரமான எதிர்ப்பு தோன்றியது. ஆகவே எதிர்ப்பாளர்களில் பலரைச் சிறைக்கு அனுப்பியது அரசு. அண்ணாவை மட்டுமல்ல, பெரியாரையும் பெல்லாரி சிறையிலே அடைத்தனர்.

இரண்டாவது முறையாக 1938-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இருபத்தாறும் நாள் இந்தித் திணிப்பை எதிர்த்து மறியல் செய்ததற்காக நான்கு மாத தண்டனை விதித்து, மீண்டும் சிறைக்கு அனுப்பியது அரசு.

ஃ ஃ ஃ

## பழிதீர்த்த அரசு!

அண்ணா அவர்கள் எழுதிய 'ஆரியமாயை' என்ற நூல் வகுப்புத் துவேஷத்தை வளர்ப்பதாகக் கூறி, அண்ணாமீது வழக்குத் தொடரப்பட்டது. அதற்காக 153-வது ஏ.பிரிவின்படி, ரூ. 700 கட்டவேண்டுமென தீர்ப்பளிக்கப்பட்டது. அப்படிக் கட்டத் தவறினால்' ஆறுமாதங்கள் கடுங்காவல் தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் தீர்ப்பில் தெரிவிக்கப் பட்டது. அண்ணா சிறைத் தண்டனையையே ஏற்றுக்கொண்டார். அப்போது, அரசாங்கம் பெரிய மனது வைத்தோ என்னவோ, அண்ணாவுக்கு சிறையில்'ஏ' வகுப்பளித்தது.

அண்ணாவை சிறைப்படுத்தியது அநியாயம் என நாடெங்கும் கண்டனக் குரல் ஒலிக்கத் தொடங்கியது அக்கண்டனக் குரல், அரசாங்கத்தார் செவிபுகுந்து, சம்பந்தப் பட்ட வழக்கின் தஸ்தாவேஜிகளை மீண்டும் புரட்டிப்பார்க்க ஆரம்பித்தனர். அதன் பிறகு பத்து நாட்கள் அண்ணா சிறையில் இருந்தது போதும் எனக் கருதியோ என்னவோ திடீரென்று சிறைக் கதவைத் திறந்துவிட்டனர்.

அரசாங்கமே வெளியில் அனுப்பிவிட்டு, அபராதம் கட்டவில்லை என்பதற்காக, அண்ணா திராவிட நாடு இதழுக்காக, அச்சடிப்பதற்கு வாங்கி வைத்திருந்த காகிதங்களைப் பறிமுதல் செய்வதாகக் கூறிக் கைப்பற்றி பழி தீர்த்துக் கொண்டது,

ஃ ஃ ஃ

## அண்ணா கொளுத்திய கொடி

அண்ணாவும் சுயமரியாதை இயக்கத்தொண்டர்களும் செட்டி நாட்டில் தேர்தல் பிரசாரத்திற்காகச்சென்றிருந்தனர். காங்கிரசுக்கும் நீதிக்கட்சிக்கும் இடையில் பெரியதோர் போராட்டமே உருவாகிவிடும் என்றநிலையுண்டாகி விட்டது. நீதிக்கட்சியின் கொடியை காங்கிரஸ் கட்சியினர் பிடுங்கிக் கொண்டு சென்றார்கள்.

இதைக் கேட்ட சுயமரியாதை இயக்கத் தொண்டர்கள் கொதித்தெழுந்தனர் கட்சியின் தேர்தல் அலுவலகத்திற்குச் சென்று அங்கு பறந்து கொண்டிருந்த கொடியைப் பிடுங்கிக் கொண்டுவந்து ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில், அந்தக் கொடி கொளுத்தப்படுமென அறிவித்தனர். அண்ணா அவர்கள் கொடிகொளுத்தும் சடங்கைச் செய்து முடித்தார்.

கொடி கொளுத்தப்படுவதற்கு முன் அண்ணா பேசியதாவது:

"தோழர்களே! என் கையில் இருப்பது தாயின் மணிக்கொடி! இதை தீமூட்டும் சடங்கை செய்து முடிக்க எனக்கு ஆணையிடப் பட்டிருக்கிறது. காங்கிரஸ் தோழர்கள் தங்கள் தாயின் மணிக்கொடியைக் காக்க விரும்பினால், இந்த மேடைமீது ஏறிவந்து நின்று, இதைத்தீயிட்டுக்கொளுத்தக்கூடாதுஎன்பதற்கான காரணங்களைக்கூறி தடுப்பதற்கு நான் அனுமதிக்கிறேன். வாதாடத்துணிந்தவர்கள் தாராளமாக மேடைக்கு வரலாம்! ஒரு மணி நேரத்திற்குள் அவர்கள் வாருங்கள், வாருங்கள்" என்று கூறி தான் அதைக் கொளுத்துவதற்கான காரணங்களையும் விளக்கிப் பேசினார்.

அண்ணா அறைகூவல் விடுத்த காட்சியைப் பலர் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். ஆனால் ஒருவர்கூட, மேடைக்கு வரத் துணியவில்லை.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. அண்ணா குறிப்பிட்ட ஒரு மணி நேரமும் முடிந்தது.

கடைசியில் அண்ணா கூறியபடியே, தாயின் மணிக் கொடிக்கு தன் கையால் தீ மூட்டினார். வெற்றிகரமாக அந்தச் சடங்கு நடைபெற்று முடிந்தது.

## ஆற்காட்டாரின் வாரிசு

இலண்டன் மாநகரில் நடைபெற்ற இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் முடிவு எதுவும் எடுக்காமலேயே கூடியவர்கள் கலைந்தனர். இந்தியப் பிரதிநிதிகள் தோல்வியுடன் தாய்நாடு திரும்பினர். அப்படி திரும்பி வந்தவர்களில் புகழ்பெற்ற ஆற்காடு இராமசாமி அவர்களும் ஒருவராவார்கள்.

அவர் சென்னை வந்ததும் வட்ட மேசை மாநாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியைப்பற்றி முழு விவரங்களையும் மக்களுக்கு எடுத்துக்கூற, சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள நேப்பியர் பூங்காவில் ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப் பட்டது.

அந்தக் கூட்டத்திற்கு அறிஞர் அண்ணாவும் போயிருந்தார். இராமசாமி முதலியார் பேசுவதற்குமுன், அண்ணா ஆங்கிலத்தில் பேசினார்.

வட்டமேசை மாநாடு முடிவடைந்து இந்தியத் தலைவர்கள் தோல்வியுடன் திரும்பிய அதே நேரத்தில், இந்திய கிரிக்கெட் குழுவினர் இங்கிலாந்து சென்று மகத்தான வெற்றியுடன் திரும்பி வந்திருந்தனர்.

அண்ணா மேற்கண்ட அந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் இணைத்து, "நம் இந்தியத் தலைவர்கள் வட்ட மேசை மாநாட்டிற்குச் சென்று தோல்வியுடன் திரும்பிய போதிலும் கிரிக்கெட் கோஷ்டியினர் வெற்றியைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறார்கள். விவேகிகள் தேடித்தராத வெற்றியை விளையாட்டுக்காரர்களாவது தேடிக் கொடுத்தார்களே; அதற்காவது நாமெல்லாம் அகமகிழ வேண்டியதுதான்" என்று பேசினார்.

(தொடரும்)

# அண்ணா கலந்துகொண்ட இரு ஊர்வலங்கள்!

**உலகத் தமிழ் மக்களினதும் உளம் கவர்ந்த தலைவன், 'தமிழ் நாடு' தந்த தீரன்—சொல்லின் செல்வன் அறிஞர் அண்ணா 60 ஆண்டுகள் தமிழ் மக்களிடையே வாழ்ந்து, இன்று தன் பூதவுடலை நீந்துப் புகழுடம்பு எய்தி விட்டார். அவர் கலந்து கொண்ட ஊாவலங்கள் ஒன்று இரண்டல்ல; எனினும் அவர் கலந்து கொண்ட பெருந்திரளான மக்களைக் கொண்ட ஊர்வலம் அவரது இறுதி ஊர்வலமெனலாம். இவ்வூர்வலத்தில் சுமார் 30 இலட்சம் மக்கள் கலந்து கொண்டனர்.**

இது போன்ற ஒரு ஊர்வலத்தினையும் சனக் கூட்டத்தினையும் சென்ற ஆண்டும் தமிழ்நாடு கண்டிருந்தது. அந்த ஊர்வலத்திலும் அண்ணா கலந்து கொள்ளாமல் இல்லை; அந்த ஊர்வலமும் மெரீனா கடற்கரையை நோக்கியே சென்றது.

ஆனால் ஊர்வலத்திற் கலந்து கொண்டவர்களின் அகத்திலும் முகத்திலும் தான் வேறு பாடு. அன்று, மக்களின் அகம் பூரித்திருந்தது; முகம் பொலிவுற்றிருந்தது. இந்த ஊர்வலத்திற் கலந்து கொண்ட மக்களின் உள்ளம் குமுறிக் கொண்டிருந்தது. முகம் பொலிவிழந்திருந்தது. கண்களில் நீர் ஓடிக் கொண்டிருந்தது.

அன்றும் அண்ணா தம்பியர் புடை சூழத்தான் பவனி வந்து கொண்டிருந்தார்; இன்றும் தம்பியர் சூழத் தாவ ஊர்வலம் போனார். அன்று, உலகமே கண்டிராத ஒரு மகாநாட்டை ஒழுங்கு செய்து விட்டோம், பண்டைத் தமிழரின் பூம்புகார் நகரத்தைக் கண்முன்னுகக் கொண்டு வந்து விட்டோம், தமிழ்த் தாய்க்குச் செய்ய வேண்டியசிறப்பெல்லாம் செய்து விட்டோம் என்றமன நிறைவோடு ஏறுடைநடையோட்டுக் கொண்டிருந்தார்; விமானத்தில் வீற்றிருந்தார்.

அருகே அமர்ந்திருந்த பாரதத் தலைவர் ஜாகிர் உசைனுக்குத், தமிழ் இலக்கியங்களையும்; தமிழர் வரலாற்றையும் பிரதிபலிக்கும் விமானங்கள் பற்றி விளக்கங்கள் கொடுத்துக் கொண்டிருந்தார். இன்று பொன்னாடைகளாலும், மல்லிகை மாலைகளாலும் உடல் முழுவதும் மூடப்பட்டிருக்கத், தலைப்பகுதி மட்டும் எல்லாருக்கும் தெரிய வேண்டும் என்பதற்காக உயர்த்தி வைத்திருக்க மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பீரங்கி வண்டியில் மீளா நித்திரையில் ஆழ்ந்திருந்தார்.

அன்றைய ஊர்வலத்தில் ஒவ்வொருரதத்திலும் மங்கல வாத்தியங்கள் ஒலித்துக் கொண்டிருந்தன; அவற்றிடையே ஆடவர் அரிவையரின் சிரிப் பொலிகள் மங்கலமாக ஒலித்துக் கொண்டிருந்தன. இன்று அமங்கல வாத்தியங்களினிடையே 'ஓ' வென்ற அவல ஓசையே ஒலித்துக் கொண்டிருந்தது.

...லும் மோதித் தம்முயிரை இழந்தவர் பலர். இம்மையில் இனி அண்ணாவைக் காணமுடியாது மறுமையிலாவது காண்போமென்று அவ்வாறு உயிரை மாய்த்துக் கொண்டனர் போலும்;

அன்று ஊர்வலம் அண்ணாவின் சிலையைத் தாண்டிச் சென்ற போது மகிழ்ச்சியாரவாரம்செய்தவர்கள்பலர்; அண்ணா வாழ்க என்று

## ஓர் ஒப்பு நோக்கு!

அன்றைய விழாவாயினும் அதனை அண்ணாவுக்கு எடுத்த விழாவெனவே கருதி 'அண்ணா வாழ்க; அண்ணா வாழ்க' என்று ஆரவாரம் செய்தனர். இன்று 'அண்ணா அண்ணா; ஐயோ; அண்ணா' என்றனரே அன்றி 'வாழ்க' என்று சொல்ல வாய் வரவில்லை.

பஸ்களிலும் புகைவண்டிகளிலும் உள்ளே இடமில்லாத காரணத்தால் கூரைகளிலும் ஏறிச் சென்று பாலங்களிலும், தூண்களி

கோஷம் எழுப்பியவர்கள் பலர்; ஆனந்தக் கண்ணீர் வடித்தவர்கள் சிலர். இன்று

அண்ணாவின் பூதவுடல் மெரினா கடற்கரையில் 'உழைப்பின் வெற்றி' சிலைக் கருகிற் புதைக்கப் பட்டாலும் அவரின் புகழ் உடம்பும், அவரின்கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய தாரக மந்திரங்களும் என்றும் புதைக்கப்பட்டு விடமாட்டா.

---

## விதியே!..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அண்ணா எங்கள் குல தெய்வம்!

அண்ணா எங்கள் விடுதலைக் காவியம!

அண்ணா எங்கள் வழி காட்டி!

அண்ணா எங்கள் இலக்கிய ஊற்று!

அண்ணா எங்கள் திசையறி கருவி!

அண்ணா எங்கள் காவல் தெய்வம!

அண்ணா உலகெங்கும் வாழும் ஆறு கோடித் திராவிடர்களின உயிரோடு உயிராய், உணர்வோடு உணர்வாய், எண்ணத்தோடு எண்ணமாய் ஐக்கியமாகி விட்டார்.

ஆம், இனித் திராவிடன் ஒவ்வொருவனுமே அண்ணாவாகி விடுவான. இனிமேல் தான் புல்லர்கள் நடுநடுங்கப் போகிறார்கள்!

அண்ணா என்ற சொல் தமிழர்களின இரத்தத்தில் புதிய முறுக்கேற்றுகிறது. அண்ணா மீது தமிழர்கள் காட்டும் பாசம் போல உலகில் வேறு எந்த இனத்தவரும் தங்கள் தலைவன் மீது பாசம் காட்டியது கிடையாது.

இதற்குக்காரணம் என்ன? அண்ணா அரசியலில் பாசத்தை கலந்தார். உலகில் அரசியலில் பாசத்தைக் கலந்து இயக்கத்தை உருவாக்கியவர் அண்ணா ஒருவர் தான்.

தம்பி, தம்பி என்று அவர் அழைப்பதை தம் வாழ்க்கையில் கிடைத்த ஓர் பெரும் பேருக தமிழர்கள் கருதுகிறார்கள்!

அண்ணா, இளைஞர்களைக் கவர்ந்து சுண்டி இழுக்கும் எழுத்தாற்றல் பெற்றவர்.

நாவசைத்தால் நாடசையக் கூடிய பேராற்றல் பெற்ற பேச்சாளர்.

சிறந்த சிந்தனையாளர்;
சிறுகதை ஆசிரியர்.
நாடகாசிரியர்
நாடக நடிகர்.
சினிமா வசனகர்த்தா.
அரசியல் மேதை.
இலக்கிய விமரிசகர்;
கலாரசிகர்;
பண்பாளர்.
கவிஞர்.
நேர்மையாளர்.
ஒழுக்கசீலர்.
காந்தீயவாதி
பத்திரிகையாளர்!

இதுபோன்றுதாம்பெற்றிருந்த இத்தனை திறமைகளையும்நாட்டுக்கும் நாட்டு மக்களுக்குமாகவே அர்ப்பணித்தார். அரசியலிலும் வாழ்விலும் கடமை கண்ணியம் கட்டுப்பாட்டை வளர்த்தார்.

தனதுசுட்டுவிரலுக்கு கட்டுப்படும் தம்பிமார் கூட்டத்தை உருவாக்கினர்.

1949ம் ஆண்டு கொட்டும் மழையில் ராபினசன் பூங்காவில் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்ட அண்ணா தனது திறமைகளாலும், தம்பிமார்களது உழைப்பாலும் தமிழர்தம் விடுதலைக் கோட்டமாக கழகத்தை கட்டியெழுப்பினர்.

தமிழ் நாட்டில் அண்ணா அடைந்த வளர்ச்சி- தி. மு. க. வின் வளர்ச்சி— வெளிநாடுகளில் உரிமை இழந்து வாழும் தமிழர்களுக்கோர் நம்பிக்கை நட்சத்திரமாக ஜொலித்தது.

1967ம் ஆண்டு தமிழக முதல்வர் பதவியை அண்ணா ஏற்றபின்னர் வரலாற்றுச் சிறப்புமிக்க ஐந்து காரியங்களைச் சாதித்தார்.

தமிழ் மன்னர்கள் ஆட்சி புரிந்த திராவிட பூமிக்கு தமிழ் நாடு என்ற பழம் பெரும் பெயரை மீண்டும் சூட்டினர்.

சாதியை ஒழித்துக்கட்ட கலப்புத் திருமணங்களை ஊக்குவித்தார்.

தமிழ் நாட்டிலிருந்து இந்தியை அடியோடு அகற்றினர்.

சுயமரியாதைத் திருமணங்களை சட்டபூர்வமாக்கினர்.

உலகம் வியக்கும் வண்ணம் உலகத்தமிழ் நாட்டை சென்னையில் நடத்தி தமிழன் புகழ்க்கொடியை உயர்த்தினர்.

மிகக் குறுகிய காலத்தில் இத்தனை அற்புதங்களைச் சாதித்த அறிவுலகமேதை அண்ணா இன்னும் ஓர் பத்தாண்டுகள் வாழ்ந்திருந்தால்......?

அதற்குத்தான் பாழாய்ப் போனதமிழினம் கொடுத்து வைக்கவில்லையே!

அண்ணா இல்லாவிட்டாலென்ன? அண்ணா அளித்த நூல்கள், அண்ணா சிந்திய கருத்துக்கள், அண்ணா அளித்த அரசியல் விளக்கங்கள், அண்ணாவின் சிந்தனைகள், சிறந்த படைக்கலங்களாக விளங்கட்டும்! அவை ஓர் கலங்கரை விளக்கமாக நின்று ஜொலிக்கட்டும்!

அண்ணாவின் பெயரைச் சொல்லிச் சொல்லித்தான் உலகத்தமிழர்கள் ஒன்றுபட வேண்டும். அண்ணாவின் பெயரைச் சொல்லிச் சொல்லித்தான், தமிழ் நாடு விடுதலை பெறவேண்டும்.

ஏனெனில் அண்ணா என்ற சொல்லுக்கு மட்டுமே தமிழ் மக்களின் இலட்சியத்தை ஈடேற்றும் மந்திர சக்தி உண்டு!

ஆகவே அண்ணா அண்ணா என்ற ஒலி பேரொலியாகி எங்கும் ஓங்கி ஒலிக்கட்டும்! அந்த ஒலியின் வலிவால் தமிழர் இலட்சியம் கை கூடட்டும்:

வாழ்க அண்ணா!

---

## எங்கே நீயோ...

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

பாதது மேலும் அவர் துன்பத்தைக் கூட்டியது. ஆயினும் தன் மக்களை விட ரகு இதுவரை வீடு திரும்பாதது தான் அவருக்கு அதிக வேதனையாக இருந்தது. இந்தக் காலத்தில் நடப்பது போல அவனும் எக்கச்சக்கமாக ஏதாவது செய்துவிட்டானோ என்று கூடச் சிந்திக்கத் தோன்றியது. அவனுக்கு ஏதாவது நடக்குமாக இருந்தால் அதை அவர் தாங்கிக் கொள்ளவே மாட்டார். அவரால் தாங்கிக் கொள்ள முடியாது. அப்படியொரு பாசம் அவரை அவனுடன பிணைத்து விட்டிருந்தது. அவர் மனம் வேண்டாத தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டது.

அவரால் அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்து கொள்ள முடியவில்லை. அதனால் அவர் வாசலுக்கும் வீட்டுக்குமாக நிம்மதியற்ற மனதுடன் நடைபயின்று கொண்டிருந்தபோது தூரத்தில் யாரோ வருவது தெரிந்தது. ஆயினும் வருவது யார் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள ஒத்தாசை செய்ய அவர் கண்கள் மறுத்தன. அங்கே சூழ்ந்திருந்த இருள் வேறு அவருக்குப்பாதகமாக அமைந்துவிட்டது. மழை பெய்ய ஆரம்பித்தசிறிது நேரத்திற்கெல்லாம் வானம் புண்டு கொட்டுவது போல் மழை சோனாவாரியாகப் பொழிந்துகொண்டிருந்தது. அந்த மழையில் தெப்பமாக நனைந்து தண்ணீர் சொட்டச் சொட்ட உள்ளே நுழைந்த உருவத்தைப் பார்த்த சின்னையா திடுக்கிட்டார். அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் அவர்கரங்கள் குவிந்து கொள்ள அவர் மனம் தெய்வத்தை வாழ்த்திக் கொண்டது. ரகுவைக் கண்டதில் அவருக்கு அப்படியொரு நிம்மதி!

—வளரும்




பாட்டாளி முதல் பணக்காரன் வரை

எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒருமுறை உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்

நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11

தந்தி: தாமரை

தொலைபேசி 3597—6522

# தமிழ்த் தென்றல் திரு. வி. க. வையே அண்ணு பேச்சு தடுமாற வைத்தது!

(3-ம் பக்கத் தொடர்)

பிறந்த பொன்ளுட்டிற்கும், பெற்ற தாய்மொழியாம் நற்றமிழுககும், ஓயாத் தொண்டாற்றக் கிளம்பிய அண்ணு அவர்களுக்கு, குடும்ப நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்ள நேரமோ, நினைப்போ ஏது? வாழ்க்கைத் துணைவியாரிடமே குடும்பம் பொறுப்பு முழுவதையுமே ஒப்படைத்துவிட்டார் நம் அண்ணு.

ஃ ஃ ஃ

ஓய்வு நேரங்களில் நூல் நிலையங்களுக்குச் சென்று புத்தகங்களில் மூழ்கிக் கிடப்பது அண்ணுவின் அன்ருடப் பழக்கம். பல நூல் நிலையங்களை நாடிச் சென்ருர். அவற்றில், அந்தக் காலத்தில, பண்டிட் ஆனந்தம் அவர்கள் தங்கசாலை வீதியில் நடத்தி வந்த நூலகமும் ஒன்ருகும். மற்றும் பல்கலைக் கழக நூலகத்திற்கும் அண்ணு அடிக்கடி செல்வதுண்டு.

அண்ணுவின் ஆற்றல் மிக்க சொல்வன்மையும் எழுத்தாற்றலும், கல்லூரியிலே ஒளிவிட்டு பிரகாசிக்கத் தொடங்கின! கல்லூரியில் நடைபெறும் விவாதங்களில் கலந்து கொண்டு வந்தார். 'விவாதம் விவேகத்தை வளர்க்கும்' என்பது அண்ணுவின் கொள்கைகளில் ஒன்று. பொதுச்சிக்கல்கள் பற்றி, நடைபெறும் விவாதங்களில் அண்ணு அவர்களைத் தவருது காணலாம்.

விவாதம் தமிழில் நிகழ்ந்தாலும் ஆங்கிலத்தில் நிகழ்ந்தாலும் அண்ணு அவசியம் அங்கு காணப்படுவார். ''அண்ணு கல்லூரியில் படிக்கின்றபோது அவர் கலந்துகொள்ளாத விவாத அரங்கு பச்சையப்பன் கல்லூரியில் நடந்ததேயில்லை எனக்கூறலாம்,'' என்று அண்ணுவின் நண்பரொருவர் குறிப்பிடுகின்ருர்.

முக்கியமாக ஒய். எம். சி. ஏ. பேச்சு அரங்கில் அறிவு இயல் துறையில் பங்குகொண்டு அண்ணு ஆற்றிய சொற்பொழிவுகள், மன்றத்தினரைப் பெரிதும் கவர்ந்தன. சொற்பொழிவு மேடையில் ஒருவித சோபிதத்தைப் புகுத்தியவர் அண்ணு என்ருல், அதை மிகைப் படுத்திக் கூறியதாகாது. அண்ணுவின்மேடைப் பேச்சைக் கேட்டுக் கிறுகிறுத்துப்போன மாணவர்கள் ஏராளம்!

கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போதே, அண்ணு அவர்களுக்கும், அன்று தொழிலாளர் சங்கத்தின் தலைவராக இருந்த காலஞ் சென்ற 'பசுதேவ்' அவர்களுக்கும் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. அந்தத் தொடர்பு அண்ணுவை மிகவும் முக்கியமான கட்டத்தில் கொண்டுவந்து நிறுத்திவிட்டது.

தோழர் பசுதேவ் அவர்களுக்கு ஆங்கிலத்தில் மட்டுமே பேசத் தெரியும். அதை அழகிய தமிழில் மொழி பெயர்த்து தொழிலாளர் உள்ளங்களில் பதியவைக்கும் பணி அண்ணு அவர்களைப் பிடித்துக் கொண்டது.

ஃ ஃ ஃ

## பேராசிரியர் பேரதிர்ச்சி

ஒரு சமயம் பச்சையப்பன் கல்லூரியில் ஒரு கட்டுரைப் பயிற்சி நடைபெற்றது. கல்லூரிப் பேராசிரியர் மாணவர்களிடம் கட்டுரை ஒன்று எழுதிவரும்படியாகக் கூறியிருந்தார். அந்த மாணவர்களில் நமது அண்ணுவும் ஒருவராவார்.

மறுநாள், மாணவர்கள் எழுதித்தந்த கட்டுரைகளைத் திருத்துவதற்காகப் பேராசிரியர் எடுத்துச் சென்ருர். அண்ணுவின் கட்டுரையைத் திருத்துவதற்கு எடுத்தபோது அவர் பேராச்சரியமுற்ருர். அண்ணுவின் கட்டுரையில் பல புதிய செய்திகள், தான் எதிர்பாராத செய்திகள் இருப்பதைக் கண்டு அவர் வியப்புக் கடலில் மூழ்கினுர்.

மறுநாள் கல்லூரி வகுப்பறைக்குள் நுழைந்த பேராசிரியர், முதன் முதலாக அண்ணுவைத்தான் அழைத்தார். பேராசிரியர் அவர்கள், தன்முன் நிற்கும் அண்ணுவிடம் 'நீ எந்தப் புத்தகத்திலிருந்து, கட்டுரைக்கு வேண்டிய கருத்துக்களை எடுத்து எழுதியிருக்கிருய்'? என்று கேட்டார். பேராசிரியரின் கேள்வியைக் கேட்ட அண்ணு சிரித்தார். பின் பதில் கூறினுர்:

''நான், என் கட்டுரையில் எழுதியவைகள் யாவும் என்னுடைய சொந்தக் கற்பனையில் தோன்றிய கருத்துக்களேயாகும். அவை எந்தப் பத்திரிகையிலும் எடுத்தெழுதப்பட்டவைகள் அல்ல!''

அண்ணு அவர்களிடம் பொருட்செல்வம் இல்லாமல் இருந்ததே தவிர, அறிவுச் செல்வம்தான் அண்ணுவைப் பிரகாசிக்க வைத்தது. 'இண்டரி'ல் அண்ணு அவர்கள் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ருர். அப்போது கல்லூரித் தலைவராக இருந்த திருவாளர் சின்னத்தம்பி அவர்கள் அண்ணு அவர்களை பி. ஏ. ஆனர்ஸ் வகுப்பில் சேரும்படியாகக் கேட்டுக் கொண்டாராம்.

ஆனுல் அண்ணுவோ, தனது பொருளாதார நிலையை எண்ணி, அதற்கேற்ற முறையில் பதிலளித்திருக்கிருர்.

எப்படியாவது அண்ணுவை ஆனர்ஸ் வகுப்பில் சேர்த்துவிட வேண்டும் என்பது கல்லூரித் தலைவரின் எண்ணம். அதன் பொருட்டு அண்ணுவைத் தனியாக அழைத்து, 'நம்மைச் சேர்ந்தவர்களில், உன்னைப்போல் நன்ருகப் படித்து, தேர்வில் பெரும்புள்ளிகள் பெற்று, முதல் வகுப்பில் வருவதென்பது மிகவும் அரிது மிகச் சிலரே அப்படியுள்ளனர். அப்படி இருப்பவர்கள் முன்னேற வேண்டியது அவசியமல்லவா?' என்று கேட்டு, அண்ணுவின் இலவசப் படிப்புக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் தான் செய்து தருவதாக உறுதி கூறினுராம்.

ஃ ஃ ஃ

## கல்விக்குக் கிட்டிய வசதி

அண்ணு ஆனர்ஸ் வகுப்பில் படித்துக் கொண்டு வந்தார். அவர் கலந்துகொள்ளாத பொது நிகழ்ச்சிகள் எதுவும் கல்லூரியில் நடைபெறுவதில்லை எனலாம்.

''தீண்டாமை கூடாது'' 'சாதிகள் ஒழிக்கப்பட வேண்டும்.' 'கலப்புத்திருமணத்தினுலேயே சாதிகளை அழிக்க முடியும்,' என்ற தலைப்புகளிலெல்லாம் கூட அண்ணு மாணவராக இருந்த போது கல்லூரியில் கூட, கல்லூரிக்கு வெளியில் மண்டிக்கிடக்கும் பிரச்சினைகளைப்பற்றிப் பேசியிருக்கிருர்.

அண்ணுவின் ஆங்கில எழுத்து நடையும் பேச்சும் எல்லாரையும் கவர்ந்தன. அவர் எழுதிய ஆங்கிலக் கட்டுரைகள் பல. அவைகளில் பெருமபாலோர் வியந்து பாராட்டியது, "MOSCOW MAY PARADE'' என்ற கட்டுரையாகும்.

நம் அண்ணு அவர்கள், 1934-ம் ஆண்டு, எம். ஏ. பட்டத்தோடு கல்லூரியை விட்டு வெளியேறிருர்.

கல்லூரியிலிருந்து பட்டக்கேடயத்தைக் கையில் வாங்கிக்கொண்டு வெளியேறிய அண்ணு, தனக்குக் கிடைத்துள்ள பட்டத்துக்கு உத்தியோகம் சுலபமாகக் கிடைத்து விடும் என்ற உறுதியுடன்தான் கிளம்பினுர்.

## வேலை தேடியவருக்குக் கிடைத்த வேலை

வேலைக்காக ஒரு சந்தர்ப்பம் அண்ணுவை நாடி வந்தது. காஞ்சியிலுள்ள முக்கியமான ஒருவரிடம் சிபாரிசுக் கடிதம் ஒன்றை வாங்கிக் கொண்டு சென்னை உயர்நீதி மன்றத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த ஒரு அதிகாரியைப் போய்ப் பார்க்கச் சென்ருர். தன்னை, அதிகாரிக்கு அறிமுகம் செய்துவைக்க, அவருக்குப் பழக்கமான ஒருவரையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு சென்ருர்.

அதிகாரியை இருவரும் சென்று கண்டனர். உடன் வந்தவர் அண்ணுவை அறிமுகப்படுத்தினுர்.

அதைக்கேட்ட அதிகாரி மிகவும் மகிழ்ச்சியடைந்து, ஆவலுடன் அண்ணுவை வரவேற்று அளவளாவினுர். அண்ணு தான்வந்த நோக்கத்தை அதிகாரியிடம் தெரிவிப்பதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்திருக்கிருர். அதற்குள் அதிகாரி முந்திக் கொண்டுவிட்டார்.

''அண்ணுதுரை! நானே தங்களைச் சந்திக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாகவே நினைத்துக் கொண்டிருந்தேன், அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவே இல்லை. நான் வந்து உங்களைச் சந்திப்பதற்குள், தாங்களே நல்ல சமயத்தில் வந்துவிட்டீர்கள்.' என்று நயமாகக் கூறினுராம்.

ஒரு பெரிய அதிகாரி நீண்ட நாட்களாகத் தன்னைப் பார்க்க விரும்பியிருக்கிருர் என்பது கேட்டு, அண்ணு மகிழ்ந்தார்.

''அண்ணுதுரை அவர்களே! நான் தங்களிடம் ஒன்றைப்பற்றிக் கூற ஆசைப்படுகிறேன். நான் மாவட்ட முன்சிப் ஆவதற்கு, எனக்கு எல்லா யோக்யதாம்சங்களும் இருக்கின்றன. அப்படியிருந்தும் பல ஆண்டுகளாக என்னைத் தேர்ந்தெடுக்காமலேயே இருக்கிருர்கள். என்னை விட்டுவிட்டு, வேறு யார் யாரையோ தேர்ந்தெடுத்திருக்கிருர்கள். நீங்கள், ஆற்காடு இராமசாமி முதலியாருக்கு மிகவும் வேண்டியவர் என்பதறிந்தேன். ஆகையால், தாங்கள் தயவு செய்து அவரிடம் என்னைப்பற்றிக் கூறி, எனக்குச் சிபாரிசு செய்ய வேண்டும்'' என்று அண்ணுவைப் பார்த்துக் கேட்டுக்கொண்டார்.

தெய்வத்தைக் கும்பிடச்சென்ற பக்தனைத் தேடிக்கொண்டுவந்து தெய்வமே விழுந்து கும்பிடுகின்ற நிலையாகிவிட்டது அண்ணுவுக்கு.

''நான் முடிந்தவரையில் உங்களுக்காக உதவி செய்ய முயற்சிக்கிறேன். தங்களை சும்மா பார்த்துவிட்டுப் போகலாம் என்றே வந்தேன். நான் வருகிறேன். வணக்கம்!'' என்று கூறிவிட்டு, தான் வந்த நோககத்தை வெளியில் சொலலாமலேயே வெளியேறினுர்.

## அண்ணு பார்த்த வேலை

அதன் பிறகு கொஞ்ச நாட்களில் அண்ணு அவர்களுக்கு ஒரு வேலை கிடைத்தது. அதைக கேட்டால் அனைவரும பேராச்சரியம் அடைவார்கள். எம். ஏ. பட்டதாரியான அண்ணு, ஒரு நடுத்தரப் பள்ளியில் ஒரு சாதாரண ஆசிரியராகப் பணியாற்றியிருக்கிருர்.

சைனு பஜாரில் உள்ள கோவிந்தப்ப நாய்க்கர் நடுததரப் பள்ளியில்தான் அண்ணு அவர்கள் தனது முதல் உத்தியோகமாகிய ஆசிரியர் பணியைத தொடங்கினுர்.

அண்ணு அவர்கள் தனது வாழ்க்கையில் முதன்முதலாக ஏற்றுக்கொண்ட உத்தியோகமும் அதுதான்; கடைசியாகப் பார்த்த உத்தியோகமும அதுதான்!

ஆசிரியப்பணி மேலதிகாரிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டிய பணியல்லவா? அண்ணு அவர்கள் சுதந்திரமாக இருப்பதில் விருப்பங்கொண்டவராயிற்றே! ஆகையால் நான்கு தினங்களிலேயே அந்த உத்தியோகத்திற்கு வணக்கம் தெரிவித்துவிட்டு, அதை விட்டு, வெளியேறிவிட்டார்.

அண்ணு அவர்கள் தொடர்ந்து ஏதாவது ஒரு உத்தியோகத்தில் இருக்கவேண்டுமென்பதே, தொத்தா அவர்களின் எண்ணமாக இருந்தது. ஆகையால் அவர்களின் வற்புறுத்தலின்பேரில், செட்டி நாட்டரசர் ராஜாசர் அண்ணுமலை அவர்களின் குமாரர் ராஜா சர் குமாரராஜா முத்தையா அவர்களிடம வேலை சம்பந்தமாகப் பார்க்கப் போனுர். தோழர் அங்கமுத்து என்பவரும் அண்ணுவுடன் சென்றிருந்தார்.

குமாரராஜா அவர்கள் அண்ணுவையும், அங்கமுத்து அவர்களையும் கண்டவுடன் அன்புடன் வரவேற்ருர். மூவரும் குமாரராஜாவின் அரண்மனைக்கருகில் உள்ள அடையாற்றில், படகில் அமர்ந்து உரையாடிக்கொண்டே சென்றனர்.

அண்ணு அவர்கள் குமாரராஜாவிடம், கல்லூரியில, டியூட்டர் வேலையைத் தனக்குத் தரவேண்டும் என்று கேட்டார். குமாரராஜா அந்த வேலை வேண்டாம் என்று கூறிவிட்டார்.

''டியூட்டர் வேலையில் அண்ணுதுரை சேர்ந்துவிட்டால், பின்னர் நீதிக்கட்சிக்கு சிறந்த பேச்சாளர் ஒருவர் கிடைப்பது அரிதாகிவிடும். ஆகவே, அண்ணுதுரை எனக்கு அந்தரங்க காரியதரிசியாகப்பணியாற்றட்டும். நான் அவருக்கு 120 ரூபாய் தருகிறேன்'' என்று கூறினுர். ஆனுல் அண்ணு அவர்கள் எந்தவிதமான பதிலும கூருமலேயே இருந்து விட்டார்.

வீடு வந்தடைந்ததும், ''தாங்கள் குறிப்பிட்டிருந்த அலுவலை மேற்கொள்ள இயலா

(11-ம் பக்கம் பார்க்க)

## அண்ணு ஒரு விருந்து

ப. ஜீவானந்தம்

இளைஞர்களிடையில் அண்ணுதுரைக்கு செல்வாக்கு அதிகரித்து வந்திருக்கிறது. அண்ணுதுரையின் சொல்வன்மையும் எழுத்து வன்மையும், இளைய உள்ளங்களுக்கு ருசித்ததே இதற்குக் காரணம்.

உலக அறிவோடும், அரசியல் உணர்ச்சியோடும், இனவெழுச்சியும், கலை ஆர்வமும், மொழிப்பற்றும், தமிழகத்தில் குறிப்பிடத்தக்க வண்ணம் கிளர்ந்தெழுந்தன. இந்தப் புதிய எழுச்சியும், உணர்ச்சியும் வாலிபர்களையும் தீண்டாமலில்லை. அண்ணுத்துரையின் பேச்சிலும் எழுத்திலும் புத்துணர்ச்சிக்கு ஒருவித கவர்ச்சியும், திருப்தியும் ஏற்பட்டது. அண்ணுத்துரையை மாணவர்கள் விரும்பினர்; வாலிபர்கள் சூழ்ந்தனர்.

அண்ணுத்துரை, ''சமூக சீர்திருத்தத்திற்கு புதிய மெருகு கொடுத்து, புதிய உணர்ச்சிகளைத் தழுவிப் போகாவிட்டால் கட்சிக்கு வளர்ச்சியில்லை'' எனக் கண்டார். அதனுல் புதிய அமைப்புக்கு வேண்டிய பூர்வாங்க வேலைகளைப் பூர்த்தி செய்தார்.



# இதுவே அண்ணு வழி!

**'தமிழன் யாருக்கும் தாழாமல்- யாரையும் தாழ்த்தாமல், எவரையும் சுரண்டாமல் - யாருக்கும் எசமானனுக இல்லாமல்-உலகில் எவருக்கும் அடிமையாக இல்லாமல் நல்வாழ்வு வாழவேண்டுமென்பதே எங்களது தலையாயகொள்கை'**

— அண்ணு.

(10-ம் பக்கத் தொடர்)

மைக்கு வருந்துகிறேன்'' என்று குறிப்பிட்டு கடிதம் எழுதிவிட்டார். அண்ணுவின் கடிதத்தைக் கண்டு குமாரராஜா வியப்படைந்தார்.

ஃ ஃ ஃ

## நீதிக்கட்சியுடன் தொடர்பு

தோழர் பகுதேவ் அவர்கள், அன்று நீதிக் கட்சியின் அரவணைப்பில் இருந்துவந்தார். தொழிலாளருக்கு சேவை செய்துகொண்டிருந்த அண்ணுவின் உருவம், நீதிக் கட்சித் தலைவர்களின் கண்களில் படாமல் இல்லை. அண்ணுவை, கட்சியில் நேரடித் தொடர்புள்ளவராகச் செய்துவிடவேண்டுமென்று, 'ஜஸ்டிஸ்' பத்திரிகையின் நிர்வாகியாகிய திருவாளர்கள் டி.ஏ.வி. நாதன் அவர்களும், 'சண்டே அப்ஸர்வர்' பாலசுப்பிரமணியம் அவர்களும், தீவிர முயற்சி எடுத்தனர். அந்த இருவரின் முயற்சிக்கும், அண்ணு மறுப்புக் கூருமல், நீதிக் கட்சியில் நேரடித தொடர்பு கொள்ளுவதற்கு ஒப்புக்கொண்டார்.

சென்னை நகராண்மைக் கழகத் தேர்தல் வந்தது. தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக அண்ணு ஒரு அபேட்சகராகப் பெத்து நாய்க்கன்பேட்டைப் பகுதியில் நிறுத்தப்பட்டார். தேர்தலின்போதுதான், பொதுமக்கள், அண்ணுவின் அழகு தமிழ்ச்சொல் விருந்து அருந்தக்கூடிய வாய்ப்பு கிட்டியது.

திரு. மா. சுப்பிரமணியம் என்பவர், காங்கிரஸ் கட்சியின் சார்பாக, அண்ணுவை எதிர்த்து நின்ருர். இருவருக்கும் இடையில் போட்டி பலமாக இருந்தது.

காங்கிரஸ் கட்சியின் சார்பில் தேர்லில் நின்ற தோழருக்காக அன்று, காங்கிரசில் பெருந்தலைவராக விளங்கிய திருவாளர்கள் சத்யமூர்த்தி, சீனிவாசராவ், வீ சி. கோபால ரெத்தினம் ஆகியவர்கள் தேர்தல் வேலைகளைக் கவனித்து வந்தனர்,

ஒரு கூட்டத்தில் அண்ணு பேசும்போது தாழ்த்தப்பட்ட மக்களை நோக்கி, ''அன்புள்ள தோழர்களே! உங்களையெல்லாம் சமமாகக் கருதக்கூடியவன் நான். அப்படிக் கருதிக்கொண்டிருக்கிற காரணத்தினுல்தான், நான் உங்களுடன் இணைந்தமர்ந்து உணவு உண்டேன். அப்படி நான் செய்ததுபோல், காங்கிரஸ் தலைவர்கள் உங்களைச் சமமாகக் கருதுகிருர்களா? இல்லையே! வேண்டுமானுல், நீங்கள் உங்கள் உணவை உண்ண வரும்படியாக அவர்களை அழைத்துப் பாருங்கள். உங்கள் உணவை உண்ண மாட்டார்கள். இதிலிருந்து தெரிகிறதல்லவா அவர்கள் உங்களை எந்த அளவில் மதிக்கிருர்கள் என்று?'' என்று கேட்டார்: கூட்டம் முடிந்ததும் கூறியபடியே, தாழ்த்தப்பட்ட தோழர் ஒருவரின் இல்லத்தில் உணவருந்திஞர்.

அண்ணு பேசிய அந்தப் பகுதியில் சில நாட்களில் காங்கிரஸ் கட்சியின் கூட்டம் ஒன்று நடந்தது. திரு. சீனிவாசராவ் பேசினுர். அவர் பேசிக்கொண்டிருக்கும்போதே, ஒரு தோழர் மீன்குழம்பு ஊற்றப்பட்ட சோற்றை ஒரு பாத்திரத்தில் கொண்டுவந்து, அவர்முன் நீட்டி, ''இதைச் சாப்பிட்டால்தான் நீங்கள் எங்களைச் சமமாக மதிப்பதாகக் கருதுவோம்'' என்ருர்.

சீனிவாசராவ் மாமிச உணவு உண்ணும் பழக்கமில்லாதவராகையால் என்ன செய்வது என்று புரியாமல் திகைத்து, கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டுவிடக் கூடாதே என்று எண்ணி, ''நான் மாமிச உணவு உண்டு பழக்கமில்லாதவன். சைவ உணவு போட்டால், நாளும் உங்களுடன் இணைந்து உண்பதற்கு இசைகிறேன்'' என்று கூறி நிலைமையைச் சமாளித்தார்.

கூட்டத்தினர் சைவ உணவைத் தயாரித்துக்கொண்டு அவரைச் சாப்பிட அழைத்தனர். சீனிவாசராவ் வேண்டா வெறுப்புடன், மிகுந்த சகிப்புத் தன்மையோடு, தாழ்த்தப்பட்ட தோழர்களுடன் அமர்ந்து, உணவைச் சாப்பிட்டுவிட்டுச் சென்ருர்.

## 'தென்றலே' தடுமாறியது

தமிழ்த்தென்றல் திரு.வி க. அவர்களையே அண்ணுவின் பேச்சு தடுமாற வைத்திருக்கிறது.

காங்கிரஸ் அபேட்சகர் அவர்களை ஆதரித்து, திரு. வி. க. அவர்கள், சென்னை ஜெவஞானம் பூங்காவில் ஒருமுறை பேசினுர். திரு. வி. க. கூறிய தவருன வார்த்தைக்கு, அந்த பூங்காவில் வேருெரு கூட்டத்தில் அண்ணு பதில் கூறிஞர்.

திரு. வி. க. பேசும்பொழுது ''நந்தவனத்தில் நாய் ஒன்று இறந்துகிடந்தால் மக்கள் அனைத்து அகற்ற முனைவார்களே தவிர, எழில் மிக்க நந்தவனத்தையே அழித்துவிடுவார்களா? அது போலவே காங்கிரஸ் கட்சியில் தீயோர் யாரேனும் இருப்பார்களேயாஞல், அந்தத் தீயவர்களை கட்சியைவிட்டு அகற்ற முனையாமல், காங்கிரஸ் கட்சியையே அழித்துவிடுதல் நன்ருகுமா? நந்தவனத்தைக் காப்பதுபோல் காங்கிரசைக் காப்பதல்லவா அறிவுடையோர் கடமை'' என்று பேசினுர்.

அண்ணு பதில் சொல்லும்போது, ''தோழர்களே! ஊரின் மத்தியில் அமைக்கப்படும் நந்தவனம், மக்களுக்கு நன்மை ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான் ஏற்படுத்தப்பட்டது. அப்படி மனிதர்கள் சென்று சுகம் பெற வேண்டிய இடத்திற்கு நாயைச் செல்லவிடலாமா? நாய் நுழைகின்ற இடம் அழகான நந்தவனமாகத்தான் இருக்க முடியுமா? நுழைந்த நாய் இறந்துபடுகிறது என்ருல், நந்தவனத்தில் மலர் மணம் வீசவில்லை; நச்சு மணம் வீசுகிறது என்றுதானே பொருள்? நந்தவனத்திலிருந்து வீசுகின்ற காற்று நச்சுத் தன்மைக்கொண்டதாக இருந்து, நாயைக் கொன்று விட்டது என்று தானே எண்ணும்படியாகஇருக்கும்? நாயின் உயிரைக் குடித்த நந்தவனத்தை ஊரின் நடுவில் இருக்கும்படியாக வைத்திருக்கலாமா? அந்த நந்தவனத்தை அழித்து, புதிதாக நல்ல மணம் வீசுகின்ற வேறு ஒரு நந்தவனமல்லவா அமைக்கப்பட வேண்டும்? அதுதானே நல்லவர்கள் செய்ய வேண்டிய கடமையும் ஆகும்?'' என்று கூறினுராம்.

இவ்வளவு நிகழ்ச்சிகளுக்குப் பிறகும், அண்ணு தேர்தலில் வெற்றி அடையவில்லை.

என்ருலும், தோல்வியைக் கண்டு அண்ணு அவர்கள் துவண்டுவிடவில்லை. தேர்தல், அண்ணுவின் பேச்சுத் திறனை, மக்கள் அறிந்துகொள்ளும்படி செய்துவிட்டது.

ஃ ஃ ஃ

நீதிக்கட்சியின் பிரச்சாரத்தில்அண்ணுவை ஈடுபடச் செய்தவர், சண்டே அப்ஸர்வர் பத்திரிகையின் ஆசிரியரான திரு. பி. பாலசுப்பிரமணியம் ஆவார்.

திரு. பாலசுப்பிரமணியம் திருவண்ணுமலையில் நடந்த மாவட்ட மன்றத் தேர்தல் கூட்டங்களில் பேசுவதற்காக அண்ணுவை அழைத்துச் செல்லத் திட்டமிட்டார். அதற்கு தொத்தாவின் அனுமதியைப் பெறவேண்டியிருந்தது. அண்ணு திரு. சம்பத்தையும் உடன் அழைத்துச் செல்ல விரும்பினுர்.

''இராமாயணத்தில் விசுவாமித்திரர் தசரதரின் அனுமதியுடன், இராம இலக்குமணர்களைப் போருக்கு அழைத்துச் சென்ருராமே. அதுபோல, நானும் ராஜாமணி அம்மையாரிடம் வேண்டிக்கொண்டு, அவர்களின் அனுமதியின்பேரில், அண்ணு—சம்பத் ஆகிய இருவரையும் தேர்தல் போருக்குக் கூட்டிச்சென்றேன்." என்று, இராமாயணக் கதையை உவமை காட்டி வேடிக்கையாகக் கூறியிருக்கிருர், திரு. பாலசுப்பிரமணியம்.

திருப்பூரில் நடைபெற்ற செங்குந்தர் இளைஞர் மாநாட்டில் அண்ணு அவர்கள் ஆற்றிய சொற்பொழிவைக் கேட்ட பெரியார் பெரிதும் மகிழ்ந்தார். சுயமரியாதை இயக்கத்தில் சேர்த்துக்கொண்டார். தந்தை பெரியாருக்குப் பிடித்தமான தனயஞகிவிட்டார் அண்ணு.

ஃ ஃ ஃ

அண்ணு ஒரு முறை அண்ணுமலை சர்வகலாசாலைக்குச் சொற்பொழிவாற்றச் சென்றிருந்தார். ''ஆற்ருேரம்'' என்று தமிழிலும், ''உலகம் பழையதும் — புதியதும்'' என்று ஆங்கிலத்திலும் பேசும்படியாகத் தலைப்புகள் கொடுக்கப்பட்டன; அண்ணு ஆங்கிலத்திலும், தமிழிலும் அழகாக சொற்பொழிவாற்றிஞர்.

கூட்டம் முடிந்த பின்னர், மாணவர்களில் இருவர் அண்ணுவைத் தனிமையில் சந்தித்து, உங்களுடைய சொற்பொழிவில் சமதர்மம் காணப்படுகிறது. ஆனுல், நீங்கள் ஏன் அந்தப் பதவி வேட்டையாடும், பிற்போக்கான, பணக்காரக்கட்சியாகிய நீதிக்கட்சியில் இருக்க வேண்டும்?'' என்று வருத்தத்துடன் கேட்டனர்.

''அந்தக்கட்சியில் நான் ஏன் இருக்கிறேன் என்ருல், அந்தப் பணக்காரக் கட்சியை, ஜனநாயக சமதர்மக் கட்சியாக மாற்றவேண்டும் என்பதற்காகத்தான்!'' என்ருர் அண்ணு.

அப்படிக் கேட்ட மாணவர்கள் யார் தெரியுமா? நாவலர் நெடுஞ்செழியனும் திரு. அன்பழகனுமேயாகும்.

## பெரியாரின் பாராட்டு

''நவயுகம்'' என்றவார இதழ் அண்ணுவை தமிழுலகத்திற்கு எழுத்துத் துறையில் அறிமுகப் படுத்தியது.

அந்தக் காலத்தில் அண்ணு அவர்களால் எழுதப்பட்ட கதைகள் எல்லாம், சௌமியன் என்ற புனை பெயராலும், பரதன் என்ற புனை பெயராலேயுமே வெளியாகியிருக்கிறது.

1939-ம் ஆண்டில், அண்ணு அவர்கள் விடுதலைப் பத்திரிகையின் துணையாசிரியர் பதவியை மேற்கொண்டார். விடுதலையில் அண்ணு அவர்கள் எழுதிய 'பரதன்—வீரன்' வாதங்களும், ஊரார் உரையாடல்களும் பொதுமக்கள் அனைவருக்கும் பிடித்தமுள்ளதாக அமைந்திருந்தன.

அண்ணு விடுதலையில் எழுதிய தலையங்கங்களில், 'கல்கத்தா காய்ச்சல்', 'ஓமன் கடற்கரையிலே', ''ரிப்பன் கட்டிடத்துச் சீமான்'' ஆகியவைகள் மிகவும் முக்கியமானவைகளாகும்.

ரிப்பன் கட்டிடத்துச் சீமான்கள் என்ற தலையங்கத்தைப் பெரியார் திரும்பத் திரும்ப பல தடவைகள் படித்து மகிழ்ந்தார்.

அண்ணுவை நேரிலேயே பாராட்டிவிட வேண்டும் என்ற எண்ணத்தை அந்தத் தலையங்கம், பெரியாரைத் தூண்டியிருக்கிறது.

பெரியார் வீடு மூன்று மாடிகளைக் கொண்டதாகும். மூன்ருவது மாடியில்தான் அண்ணு மாலைப்பொழுதைக் கழிப்பது வழக்கம். ஒரு நாள் அண்ணு மூன்ருவது மாடியில் அமர்ந்து ஏதோ படித்துக்கொண்டிருந்தார். மூன்ருவது மாடிக்குச் செல்லும் படிக்கட்டுகளோ மிகவும் குறுகலானவை. அந்தப் பாதை வழியாகப் பெரியார் ஏறிச் செல்வதென்பது மிகவும் சிரமம் தரக்கூடியது.

அந்தச் சிரமத்தையும் பொருட்படுத்தாமல், பெரியார் தட்டுத்தடுமாறிக் கொண்டே ஏறி வந்தார். ''இவ்வளவு சிரமத்துடன் ஏன் இப்படிப் படிக்கட்டுகளில் ஏறி வந்தீர்கள்? கூப்பிட்டிருந்தால், நானே கீழே வந்திருப்பேனே?'' என்ருர் அண்ணு.

''அண்ணுதுரை! நீங்கள் எழுதிய ரிப்பன் கட்டிடத்துச் சீமான்கள் என்ற தலையங்கம், ரொம்பவும் பிரமாதமாக இருக்கிறது'' என்று பாராட்டிஞராம் பெரியார்.

இதைக் கேட்ட அண்ணு, ''இந்தபாராட்டுதலுக்கு இப்போது என்ன அவசரம்? நான் கீழே இறங்கி வந்தபின் எப்பொழுது வேண்டுமானுலும் கூறலாமே!'' என்று பதில் சொல்ல—

''நான் யாரையும் பாராட்டும் பழக்கம் கொண்டவனல்ல! உன்னை பாராட்டவேண்டும் என்று விரும்பினேன். உடனடியாக நிறைவேற்றவில்லையானுல், அந்த எண்ணம் மறுகணமே மாறினுலும் மாறிவிடும். அதனுல் தான் மேல்மாடிக்கு வந்தேன்.'' என்று கூறினுர் பெரியார்.

ஃ ஃ ஃ

## 'எழுத்தி'ன் பெருமையைக் காத்தவர் அண்ணு!

அப்போது ''லார்ட் ரெங்கின்'' என்பவர் சென்னை கவர்னராகப் பதவியேற்றிருந்தார். அவருக்கிருந்த திறமைக் குறைவைப்பற்றி, அண்ணு விடுதலைப் பத்திரிகையில் விளக்கமாக ஒரு தலையங்கம் எழுதியிருந்தார். அது எல்லோரையும் திடுக்கிடவைத்தது.

அந்தத் தலையங்கம் எழுதியதற்காக வருத்தம் தெரிவித்து, அதே விடுதலையில் எழுதியாக வேண்டும்என்று, கவர்னர் மாளிகையிலிருந்து காலஞ்சென்ற ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்களுக்கு தாக்கீது வந்தது. பன்னீர் செல்வம் அண்ணுவின் துணிவுள்ளத்தையும், தன்மானவுணர்வையும், அஞ்சா நெஞ்சத்தையும் தெரிந்துகொள்ளாமல, ஈரோடு சென்று, கவர்னரைப் பற்றி எழுதியதற்கு வருத்தம் தெரிவித்து எழுதுமாறு கேட்டுக்கொண்டார்.

ஆனுல், அண்ணு ''எழுதியது எழுதியதுதான். என் கையால் அதற்கு வருத்தம் தெரிவித்து எழுதமுடியாது.'' என்று பிடிவாதமாக மறுத்துவிட்டார். பன்னீர் செல்வம் அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினுர்.

ஃ ஃ ஃ

1941ஆம் ஆண்டில், ராஜா சர். அண்ணுமலைச் செட்டியாருடைய அறுபதாம் ஆண்டு நிறைவு நினைவு விழா நடைபெற்றது. மிக

(8-ம் பக்கம் பார்க்க)



# இப்பொழுது வெற்றியுடன் காண்பிக்கப்படுகின்றது!!

பரவசமூட்டும் காதல் காட்சிகள்! திடுக்கிட வைக்கும் சண்டைக் காட்சிகள்!! நெஞ்சையள்ளும் இனிய இசை!! வயிறுகுலுங்கச் சிரிக்க வைக்கும் ஹாஸ்ய வெடிகள்! எல்லாம நிறைநத சொல்லொத்ததிரை விருந்து!!

**சென்ரல்** (மருதானை) **நவா** (கொம்பனித்தெரு) **ராணி** (யாழ்நகர்) **மனோகரா** (யாழ்நகர்) **ராஜேஸ்வரா** (மட்டுநகர்)

**ஜோதி** (திருமலை) **லிபர்ட்டி** (ஹட்டன்)

ஆகியதிரைகளில்

—★★…★…★…★★—



—*—

* ஜெய்சங்கர் * விஜயநிர்மலா * விஜயலலிதா * சோ,
* அசோகன் * எஸ். வி ராமதாஸ்

—நடித்த—

ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ்

# நீலகிரி எக்ஸ்பிரஸ்

இசை: டி. கே. ராமமூர்த்தி டைரக்ஷன்: திருமலை—மகாலிங்கம் கதை வசனம் 'சோ'



# 3 வது ஜனத்திரள் வாரம்!

**செல்லமகால்** (கொட்டாஞ்சேனை) **ஈரோஸ்** (பாமன்கடை) **ஜசீமா** (கிராண்ட்பாஸ்)

**இம்பீரியல்** (மட்டுநகர்) **வின்சர்** (யாழ்ப்பாணம்)

**எம். ஜி. ஆரின் 100 படங்களிலும் மிக உன்னதமான சித்திரம்**
**தமிழ்நாட்டிலே 100 நாட்களுக்கு மேலாக ஓடியது**

கடந்த ஆண்டின் எம். ஜி ஆர் சித்திரங்கள் எல்லாவற்றிலும் கூடிய வசூல் பெற்ற சித்திரம்

எம். ஜி. ராமச்சந்திரன், ஜெயலலிதா, ராஜ ஸ்ரீ, நாகேஷ், நம்பியார், விஜயலட்சுமி நடிக்கும

# குடியிருந்த கோயில்

(ஈஸ்மன் கலர் சித்திரம்)

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

தினமும் 2, 6, 9-30 மணி

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாசா** (வெள்ளவத்தை) **மைலன்** (கொழும்பு)

**ஸ்ரீகிருஷ்ணா** (திருகோணமலை) **விஜிதா** (அட்டன்)



ஸ்ரீதரின்

100 நாள் விழாக்கொண்டாடிய மற்றொரு அழகிய ஈஸ்மன் கலர் சித்திரம்

சிவாஜி கணேசன், கே. ஆர். விஜயா, எல். விஜயலக்ஷ்மி, முத்துராமன், குமாரி சச்சு, வி. கே. ராமசாமி, நாகேஷ், பாலையா

— நடித்த —

# 'ஊட்டி வரை உறவு'

(பாஸ்கள் சலுகைகள் ரத்து)

## 4-வது வாரமாக காட்சி தருகிறது!

**லிடோ** (பொரளை)

ஜனாதிபதி பரிசு பெற்ற சித்திரம்! (தகழி சிவசங்கரம்பிள்ளையின்)



# செம்மீன்


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ; இலக்கத்தில் 1969-வருடம் பெப்ரவரி மாதம் 9-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது. தொலைபேசி: 23411